பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 26 செவ்வாய்க்கிழமை (10-03-1998) UTHAYAN– A Lively National Tamil Daily கதிர்: 88

# ஏறாவூரில் டிராக்டரில் வெடிகுண்டு:

# பொலீஸ்காரர் உட்பட அறுவர் பலி!

## 30 பேர் வரை படுகாயம்

மட்டக்களப்பு, மார்ச் 10

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் நேற்று நிறுத்திவைக்கப்பட்டிருந்த டிராக்டரில் அரிசி மூடைகளிடையே ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படும் வெடிகுண்டு வெடித்ததில் பொலீஸ்காரர் ஒருவர் உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர். முப்பது பேர் வரை படுகாயமடைந்தனர்.

ஏறாவூர் மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு அருகில் கராஜ் ஒன்றின் வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த டிராக்டரில்இருந்த குண்டே நேற்றுப் பிற்பகல் 3.55 மணியளவில் வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

அந்த கராஜுக்கு நேற்று முன்தினம் டிராக்டரைக் கொண்டுவந்த சிலர் அங்கு திருத்துவதற்காக அதனை விட்டதாகவும்—

பின்னர் வந்து டிராக்டரைப் பொறுப்பேற்பதாகத் தெரிவித்து அவர்கள் சென்றுவிட்டதாகவும் — கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு — பொலன்னறுவை ஆகிய இடங்களுக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மருதானைக் குண்டு வெடிப்பு

## பெண் சார்ஜண்டான தமிழ் யுவதி கைது!

கொழும்பு, மார்ச் 10

மருதானைக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கொழும்பு கொம்பனித்தெரு பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ்ப் பெண் பொலீஸ் சார்ஜண்ட் ஒருவர் நேற்று முன்தினம் இரவு விசேட பொலீஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு கொழும்பு தேவாலய வீதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த பன்னிரண்டு வருடகாலமாக பொலீஸ் சேவையில் இருக்கும் இவர் கடந்த இரு வருடங்களாகக் கொம்பனித்தெரு பொலீஸின் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றி வந்தார்.

கடந்த வியாழக்கிழமை — மருதானையில் குண்டு வெடித்த தினம்—இவர் விடுமுறையில் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

மருதானைக் குண்டுவெடிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் பொலீஸ் நிலையம் மீது நேற்று அதிகாலையில் தாக்குதல்!

### 4 பொலீஸார் பலி! எண்மர் காயம்!!

கொழும்பு, மார்ச் 10

திருகோணமலை மாவட்டம் மூதூர் பச்சைனூர் பொலீஸ் காவல் நிலையம் மீது நேற்று அதிகாலை 2. 30 மணி முதல் 4. 30 மணி வரை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கின்றார்கள்.

இத்தாக்குதலில் 4 பொலீஸார் உயிரிழந்தனர்; எட்டுப் பொலீஸார் காயமடைந்தனர். அவர்களில் நால்வர்திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலீஸாரின் பாதுகாப்பு பகுதிகளும் தீயிடப்பட்டதாகக் கூறப்பட்டது.

இராணுவ மீட்புப் படை அங்கு சென்ற போது பல பொலீஸார் அங்கு இருக்கவில்லை என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்தியச் செய்தி ஒன்று குறிப்பிட்டது.

தமது பத்து நிமிடத் தாக்குதலில் பொலீஸ் நிலையம் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு பின்னர் அது அழிக்கப்பட்டதாகவும்—

60 மி. மி. மோட்டார் — 1, ரி-56 ரகத் துப்பாக்கிகள்— 5, கைத்துப்பாக்கி —1 மோட்டார் ஷெல்கள், பல்வேறு ரக ரவைகள், ஜெனரேட்டர், ரி. வி. ஆகியவை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சீதாராம் கேசரி பதவி விலகல்!



புதுடில்லி, மார்ச் 10

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சீதாராம் கேசரி (வயது 82) தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி கணிசமான வெற்றி பெறத் தவறியதற்குத் தார்மீகப் பொறுப்பேற்றுத் தாம் பதவி விலகுவதாகப் புதுடில்லியில் செய்தியாளர் மாநாட்டில் அவர் அறிவித்தார்.

கட்சியின் தலைமைப் பொறுப்பைத் திருமதி சோனியா காந்தி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி டென்மார்க்கில் மாநாடு

மணிலா, மார்ச் 10

ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமைக்கான சர்வதேச மாநாடு ஒன்று கடந்த சனியன்று டென்மார்க் தலைநகர் ஹொப்பன்கேகனில் நடைபெற்றது.

டென்மார்க்கின் முன்னாள் பிரதமர் உட்பட அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், கிறிஸ்தவ திருச்சபைகள், அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியனவற்றின் பிரதிநிதிகள் பலர் அந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

தமிழ்ப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாகவும் அந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டதாக வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

தமிழ் மக்களின் அரசியல் சுயநிர்ணயப் போராட்டத்தை ஆதரிக்க டென்மார்க் அரசு ராஜீக ரீதியில் முயற்சி எடுக்க வேண்டும் என மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

தமிழ் மக்கள் மீதான இரா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்று தொலைபேசி 'அவுட்'!

கொழும்பு, மார்ச் 10

கொழும்பு நகரில் நேற்று சகல தொலைபேசிகளும் செயலிழந்திருந்ததாக ரெலிக்கொம் நிறுவனம் தெரிவித்தது.

தானாகஇயங்கும் தொலைபேசிப் பரிமாற்றச் செயற்பாடுகளில் ஏற்பட்ட குறைபாடு இதற்குக் காரணமாகும் —என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் அரச அலுவல

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அதிக அதிகாரங்களைக் கொடுத்து பிரபாவை ஆளுநராக நியமியுங்கள்!

## அரசுக்கு தொண்டா யோசனை

கொழும்பு, மார்ச் 10

★ தமிழ் மக்கள் தனியாகப் பிரிந்து போக விரும்பவில்லை. அவர்கள் கௌரவத்துடனும் சுய உரிமைகளுடனும் வாழ்வதற்கே விரும்புகிறார்கள்.

★ ஒரு நாடு இரண்டு அரசியல் நடைமுறை என்ற அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற ரீதியில் இந்தச் சிக்கலைத் தீர்க்க முடியும்.

★ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை வடக்குக் கிழக்கு ஆளுநராக நியமித்து அதிக அதிகாரங்களை — அதாவது ஜனாதிபதிக்கு உள்ளது போன்ற அதிகாரங்களை — வழங்கினால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிராமிய கைத்தொழில்துறை அமைச்சருமான எஸ். தொண்டமான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ''சீனா, — ஹொங்கொங்'' நிர்வாக முறையை மேற்கோள் காட்டி அரசுக்கு தனது யோசனையை முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் தொண்டமான் இந்த யோசனைகளை வெளியிட்

(10ஆம்பக்கம் பார்க்க)

## சிவிலியன் காயம்

கொழும்பு, மார்ச் 10

மட்டக்களப்பு பட்டிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை அதிரடிப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த சமரில் இடையில் சிக்கிய சிவிலியன் ஒருவர் காயமடைந்தார். அவர் தற்பொழுது கல்முனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (உ-9)

## மீனவர் கடலுக்கு போகவில்லை

குருநகர், மார்ச் 10

குருநகர்ப் பகுதி மீனவர்கள் நேற்று தொழிலுக்காக கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.மத்தியின் மைந்தனை வாழ்த்துகின்றோம்

ஜனாதிபதிச் சின்னம் பெற்றவரும்,
துடுப்புத் தலைவரும்,
1997 இல் வணிகத்துறையில் 3 ஏ, 1 பி பெற்றவரும்,
யாழ்.மாவட்டத்தில் 10ஆம் இடத்தைப் பெற்றவருமான

**தியாகராஜா நடனசபேசன்**

அவர்களை வாழ்த்துகின்றோம். அத்துடன் 4 ஏ பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

அதிபர், சாரணப் பொறுப்பாசிரியர்கள்,
சாரணர்கள், முதலாவது சாரணர் குழு.
யாழ். மத்தியகல்லூரி.

(53965)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது தென்மராட்சிக் கிளையைச் சேர்ந்த
மனோ அம்பாள் பேக்கரி உரிமையாளரின்
அன்புத் தாயாராகிய

திருமதி
**வேலுப்பிள்ளை சிவஞானபூரணம்**

அவர்களின் ஆத்ம சாந்திக்காக நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மா. பே. உ. சங்கம்,
39, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (சி/3081)

## யா/யூனியன் கல்லூரி

தெல்லிப்பழை

எமது கல்லூரியின் நூல் நிலைய அபிவிருத்திக்காக கல்லூரி (உயர்தர) மாணவ மன்றத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 7-3-98 அன்று நடைபெற்றது. இதற்கான பரிசு பெறும் இலக்கங்கள் பின்வருமாறு:

1ஆம் பரிசு — 13844
2ஆம் பரிசு — 16445
3ஆம் பரிசு — 18476

ஆறுதல்பரிசுகள்:

| | | | |
|---|---|---|---|
| (1) | 16433 | (6) | 12756 |
| (2) | 14723 | (7) | 14453 |
| (3) | 16454 | (8) | 11227 |
| (4) | 17574 | (9) | 13407 |
| (5) | 02752 | (10) | 07198 |

அதிபர்
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(சி/3082)

## அனலைதீவு விஜயம்

அளவெட்டி, மார்ச் 10

அனலைதீவில் உள்ள தீவுப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் ஆகியோர் அண்மையில் விஜயம் செய்திருந்தனர்.

அங்கு நான்கு முன்பள்ளி நிலையங்களையும், தையல் பயிற்சி நிலையம் ஒன்றையும் அவர்கள் திறந்துவைத்தனர். தீவுப் பகுதி உதவி அரசாங்க அதிபர் எவ். எக்ஸ். செல்வநாயகம், ஈ. பி. டி. பி. யின் எம். பி. எஸ். சிவதாசன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (இ-13)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று மட்டும்
விஜய்
நடித்த
**சந்திரலேகா**
11-03-98 புதன் முதல்
வியாழன் வரை
முரளி, கௌசல்யா,
சார்ளி
நடித்த
**காலமெல்லாம் காதல் வாழ்க!**
பழைய நேரம்
10-30, 2-30
(53782)

## நெல்லியடி மஹாத்மா

வெண் திரையில்

இன்று முதல்
நாகர்ஜுன்
சுமிதாசென்
நடித்த
**ரட்சகன்**
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2756)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 30 - 01 - 1929

உதிர்வு: 20 - 02 - 1997

**அமரர் சின்னத்துரை கணேசரத்தினம்**

திதி: 10-03-1998

ஐயா! ஆலமரமாய் நீயிருக்க அந்நிழலில் நாம் ஆறியிருந்தோம்.
ஐயா! விடிவிளக்காய் நீ நின்றெரிய அவ்வொளியில் நாமிருந்தோம்.
அந்தோ! இன்று நாம் திசைமாறிய குருவிகளாய் தனித்து நிற்கின்றோம்.
ஐயா! காலமெல்லாம் துணையாக இருப்பீர்கள் என்றே தான் கனவுகண்டோம்.
கண்ணிலே அருவியாய் நீர்பாய வாழ்கின்றோம்.
ஓராண்டு சென்றாலும் ஆறாது எம் துயரம்.

உம் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

K. மணிவண்ணன்
ஏழாலை தெற்கு,
மயிலங்காடு சுன்னாகம்.

[சி/3071]

# மரண அறிவித்தல்கள்

## P. J. அருளையா

இலக்கம் 15, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குளியில் வசித்தவரும், தலவாககலை 'டின்டுள' எஸ்டேட்டில் கடமைபுரிந்தவருமாகிய P. J. அருளையா 9 – 3 – 98 அன்று காலை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற மாமலரின் அன்புக் கணவரும், சாம் குணரத்தினத்தின் (முன்னாள் Burr & Co யாழ்ப்பாணம் தற்போது General manager Dong - Yong Lanka) அன்புத் தந்தையும், அமிர்தராணியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை, பார்வதி வித்தியாலயம் அரியாலை), அன்பு மாமனாரும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் தனுஷா, சுதர்ஷினி (மாணவி, பல்கலைக்கழகம், கொழும்பு), ஷாமினி (Open Arc Computer Management Kokuwela) கிருஷாணி (மாணவி, St. Bishops Collegl Colpity) ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (10 - 3 – 98) இன்று பிற்பகல் 3 மணிக்கு நுகேகொட பெந்தகொஸ்தே சபைச் சாலையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி D. S. ஆனந்தநாயகம்
(பெறாமகள்) உடுவில்

இல - 1, சோமசுந்தரம் லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (53971)

## தம்பு பாலசுந்தரம்

கரம்பனைப் பிறப்பிடமாகவும் சிவகுருநாதர் வீதி நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்டவரான தம்பு பாலசுந்தரம் அவர்கள் 08 – 03 – 1998 அன்று மன்னாரில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், அகிலந்திருநாயகி(தேவி) (ஓமான்), விஜியரத்னம், றஞ்சினி ஆகியோரின் அன்புத்தந்தையும், சின்னத்தம்பி (ஓமான்), சொர்ணாம்பாள், மனோகரன் ஆகியோரது மாமனாரும், சுதாகரன் (ஜேர்மனி), கவிதா (ஓமான்), அகிலன், பிரதீபா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08 - 03 – 1998 அன்று மன்னாரில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. மனோகரன்
(மருமகன்)

23, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (53966)

திருமதி
## தங்கம்மா துரையப்பா

காரைநகர் மாப்பாணவூரியைச் சேர்ந்த திருமதி தங்கம்மா துரையப்பா 8-3-98 மாலை 6.30 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பாவின் அன்பு மனைவியும், ஏகபுத்திரன் ரவீந்திரன் (லலிதா TEX, வவுனியா), அவர்களின் அன்புத் தாயாரும், சத்தியராணியின் அன்பு மாமியும், மதுசாயினி, தன்சாயினி, சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 9-3-93 சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
N. மகாராசா

மாப்பாணவூரி,
காரைநகர். (53943)

## கிறிஸ்தோப்பர் அந்தோனிமுத்து

(ஓய்வுபெற்ற பரிசாரகர்)

நெடுந்தீவைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் அந்தோனிமுத்து நேற்று (09-03-98) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலத்தின் அன்புக் கணவரும், ஜீவானந்தம் (வவுனியா), ராணி (நெடுந்தீவு), ரஞ்சிதம் (வவுனியா), உதயன் (அப்பன்), கரன் (வவுனியா), தனம் (கிளிநொச்சி), சத்தியா (வவுனியா), நந்தன் (இந்தியா), புவனேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பேக்மன், மரியராணி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10-03-98) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் நெடுந்தீவு கட்டிறான்சல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உதயநாதன் (அப்பன்)
(மகன்)

24, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (53970)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. ஆதரவை முழுமையாக பெற பாரதீய ஜனதா கட்சி முயற்சி!

## டில்லியில் ஜெயலலிதாவுடன் அத்வானி பேச்சு

புதுடில்லி, மார்ச் 10

அரசு அமைப்பதில் அகில இந்திய அ.தி.மு.கவின் முழுமையான ஆதரவைப் பெறுவதில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் ஆர்வங் காட்டி வருகின்றனர்.

தற்பொழுது காங்கிரஸுக்கும் பாரதீய ஜனதாவுக்கும் இடையில் இடம் பெற்று வரும் அரசியல் பலப்பரீட்சையில் வெளியில் இருந்து பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு வழங்கப்போவதாக அ.தி.மு.க.தலைவி செல்விஜெயலலிதா அறிவித்திருப்பது தெரிந்ததே.

அ.தி.மு.கவை அரசுக்குள் நேரடியாக இழுப்பதற்கான முயற்சிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

டில்லி சென்றுள்ள செல்வி ஜெயலலிதா பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர்களில் ஒருவரான அத்வானியின் வீட்டில் அத்வானி உட்பட பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களுடன் நேற்று நீண்ட நேரம் பேச்சு நடத்தினார்.

அதே சமயம் எக் கட்சிக்கும் ஆதரவு வழங்கப்போவதில்லை என்ற கொள்கையை தெலுங்கு தேசம் உறுதியாகக் கடைப்பிடிக்குமானால் லோக சபையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் தன்னால் வெற்றி பெற முடியும் என்று பாரதீய ஜனதாக் கட்சி கருதுகிறது.

தெலுங்கு தேசம் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்க மறுக்கிறது. அதே சமயம் பாரதீய ஜனதாவை ஆதரிக்கத் தயங்குகிறது.

இதற்கிடையில் மத்தியில் புதிய அரசு அமைப்பது பற்றி பொறுத்திருந்து செயற்படும் உத்தியை காங்கிரஸ் பின்பற்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் இன்னும் நடைபெறவில்லை. (இ-3)

## ராஜஸ்தானில் 15 பேர் பலி!

சென்னை. மார்ச் 10

ராஜஸ்தானில் நேற்று முன்தினம் பலோற்றா நகரில் அரசின் சாலைப் போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்று ஒரு ஜீப்புடன் மோதியதில் 11 பேர் உயிரிழந்தனர்; ஐந்து பேர் காயம் அடைந்தனர். (இ-9)

## பியூஜனதாக் கட்சி பி.ஜே. பிக்கு ஆதரவு

புதுடில்லி, மார்ச் 10

மத்தியில்பாரதீய ஜனதா அரசுக்கு பியூஜனதாக்கட்சி நிபந்தனையற்ற ஆதரவு அளிக்கும் என்றும்—

ஆனால் ஆட்சியில் பங்கேற்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும்— அந்தக்கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் நவீன் பட்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளவர்களின் கூட்டத்தில் அவர் முறைப்படி நாடாளுமன்றக் குழுத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

பாரதீய ஜனதாவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அண்மையில் நடந்த மக்களவைத்தேர்தலில் ஒரிஸா மாநிலத்தில் இருந்து இக்கட்சியின் சார்பில் 9 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர், (இ-3)

## கோயம்புத்தூரில் 13 பேர் கைதாகினர்

சென்னை, மார்ச் 10

தடை செய்யப்பட்டுள்ள 'அல்லுமா' அமைப்பைச் சேர்ந்த 13 பேரை கோயம்புத்தூரில் பொலீஸார் கைது செய்தனர்.

சென்ற மாதம் கோவை நகரையேஉலுக்கிய தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து இந்த அமைப்புக்கு தமிழக அரசு தடை விதித்திருந்தது.

இந்த அமைப்பின் நிறுவகரும், தலைவருமான எஸ். ஏ. பாஷா கைதானவர்களில் அடங்குவார்.

தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் இவர்கள் காவலில் வைப்பட்டுள்ளனர். (இ-3)

## காஷ்மீரில் முதல் வெற்றி பாரதீய ஜனதாவுக்கு

ஸ்ரீநகர் மார்ச் 10

ஜம்மு– காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற தேர்தலில் முதலில் வெளியான ஜம்மு தொகுதி மக்களவை முடிவில் பாரதீய ஜனதா வேட்பாளர் வைட் விஷ்ணுதத் வெற்றி பெற்றுள்ளார்.

அவர் அடுத்தபடியாக வந்த தேசிய மாநாட்டுக் கட்சி உறுப்பினர் ஜனகராஜ் குப்தாவை ஒருலட்சத்து 27 ஆயிரம் வாக்குகளால் வென்றார்.

அந்த மாநிலத்தில் மாநாட்டு கட்சி வேட்பாளர்களே பெரும்பாலான தொகுதிகளில் முன்னணியில் உள்ளனர். (இ-3)

**உலக அரங்கில்**

## தேயிலை விதையிலிருந்து சத்துணவு

சென்னை, மார்ச் 10

தென்னிந்திய தேயிலை விதைகளில் இருந்து கூடுதல் புரதச்சத்தையும், சமையல் எண்ணெயையும் தயாரிக்க அதிக வாய்ப்புக்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (இ–3)

## பாப்பரசர் இம் மாதம் நைஜீரியா விஜயம்

ஒனிட்ஷா, மார்ச் 10

பரிசுத்தப் பாப்பரசர் இம் மாதம் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நைஜீரியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்.

பாப்பரசரை வரவேற்பதற்காக நைஜீரியாவில் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் ரிகேட்தொப்பிகள் போன்ற இன்னோரன்ன பொருள்கள் பாப்பரசரின் படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன. (அ–9)

## பெண்கள் மட்டும் பணியாற்றிய விமானம்

### மகளிர் தினத்தில்சேவையில்

சென்னை, மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்தியன் எயர்லைன்ஸின் இரண்டு விமானங்களின் பயணங்களை முழுவதுமாக பெண்களே மேற்கொண்டனர்.

விமானம் ஓட்டுவது முதல் பணிப் பெண்கள் வரை விமானம் தொடர்பான சகல வேலைகளையும் பெண்களே அன்று மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ–9)

## அமெரிக்க பயமுறுத்தலுக்கு அனான் கடும் ஆட்சேபம்

நியுயோர்க்,மார்ச் 10

ஆயுதப் பரிசோதனை தொடர்பாக ஐ. நாவுக்கும் ஈராக்குக்கும் இடையிலான ஒப்பந்தத்தை ஈராக் மீறினால் ஈராக் மீது ஒரு தலைப்பட்சமாக ராணுவத் தாக்குதல் நடத்தப் போவதாக அமெரிக்கா அறிவித்திருப்பதை ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் கடுமையாக ஆட்சேபித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சிக்கு பேட்டியளித்த அவர், அமெரிக்கா இத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு முன்பு ஐ. நா. பாதுகாப்புச் சபையிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும் எனக் கோரினார்.

புதிய ஒப்பந்தத்தின்படி ஐ. நா. ஆயுதப் பரிசோதகர்கள் பதற்றமான இடங்களிலும், அதிபர் மாளிகை வளாகத்துக்குள்ளும் தங்கு தடையின்றி நுழைய அனுமதிப்பதாக ஈராக் வாக்குறுதி அளித்துள்ளது.

அமெரிக்கரான ஸ்கொட் பெரட்டேர்தலைமையிலான் 50 உறுப்பினர் ஐ. நா. ஆயுதப்பரிசோதகர்குழு நேற்று முன்தினம் 10 மணி நேர ஆய்வை நடத்தியது.

எவ்வித பிரச்சினையும் இன்றி இந்த ஆய்வு நடைபெற்றது. (இ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்''

**திருமதி கிறேஸ் நேசமுத்தம் இராசரத்தினம்**
[நேசமணி அக்கா]

தோற்றம்: **08 – 11 – 1910**

மறைவு: **08 – 02 – 1998**

எங்கள் அன்புத் தாயாரின் பிரிவுச் செய்தி அறிந்து வருகை தந்து, எமது துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதலளித்தோருக்கும், மலர் வளையங்கள், மாலைகள் சாத்தி அஞ்சலி செய்தோர்க்கும், அன்னாரின் இறுதி ஆராதனை நிகழ்வைச் சிறப்பாக நடத்தியருளிய தென்னிந்திய திருச்சபை ஆயர் மற்றும் இறை ஊழியர் அனைவருக்கும், இறுதிச் சடங்குகள் சிறப்பாக நிறைவேற பல்வேறு வழிகளிலும் உதவியளித்தோருக்கும், தொலைவிலிருந்தும் கடிதமூலம் எமக்கு அனுதாபமும், ஆறுதலுமளித்தோர்க்கும் எமது அன்பான நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

அதே போன்று அன்னாரின் ஞாபகார்த்தமாகவும், அவரின் முன்மாதிரியான ஜீவியத்திற்காக நன்றி செலுத்துமுகமாகவும் **14 - 03 - 98** சனிக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆராதனை நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

இமையாணன்,
உடுப்பிட்டி.

(53955)

## பங்களாதேஷில் பகிஷ்கரிப்பு முடிவு

கொழும்பு, மார்ச் 10

பங்களாதேஷ் நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்து வந்த முக்கிய எதிர்க்கட்சி அந்த பகிஷ்கரிப்பை முடித்துக் கொண்டுள்ளது.

கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான காலிதாசியா தனது பங்களாதேஷ் தேசியக்கட்சி அங்கத்தவர்கள் சகிதம் நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இந்தக் கட்சி கடந்த ஆறு மாதங்களாக நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்து வந்தது. ஆளுங் கட்சியுடன் ஏற்பட்ட ஓர் உடன்பாடு காரணமாகவே எதிர்க்கட்சியைச் சேர்ந்த 114 அங்கத்தவர்களும் நாடாளுமன்றத்துக்கு சென்றிருந்தனர்.

பேகம் காலிதாசியாவின் தேசியக் கட்சியுடன் சேர்ந்து கடந்த ஓகஸ்ட் மாதத்தில் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறிய அடிப்படை வாத ஜமாஸத் இஸ்லாமியக் கட்சி தொடர்ந்தும் நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்து வருகிறது. (இ–9)

## சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் ஸார் மன்னனின் சடலம் அடக்கம்

மொஸ்கோ, மார்ச் 10

1917 ஆம் ஆண்டு போல்ஸ்விக் புரட்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்ட ரஷ்யாவின் இறுதி ஸார் மன்னன் இரண்டாம் நிக்கலஸின் உடல் வருகின்ற யூலைமாதம் 17 ஆம் திகதி மொஸ்கோ புனித பீற்றர்ஸ் சதுக்கத்தில் அடக்கம் செய்யப்படும்.

ரஷ்யப் பிரதமர் தலைமையில் இதற்கான ஆயத்தங்கள் செய்யப்படும்.

ஊரல் மலைநகர வீடு ஒன்றில் 1917 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட இரண்டாம் நிக்கலஸின் உடல் 1991 ஆம் ஆண்டு தோண்டி எடுக்கப்பட்டு தற்போது மொஸ்கோவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 நீர் விநியோகத் திட்டங்களுக்கு
# ஐரோப்பிய நாடுகள் ரூ.10 கோடி உதவி

கொழும்பு, மார்ச் 10

யாழ்.மாவட்டத்தில் 17 நீர் விநியோகத் திட்டங்கள் புனரமைக்கப்பட உள்ளன.

பெருந்தொகையான மக்களுக்கு குடிதண்ணீர் வசதியை வழங்கும் நோக்கத்துடன் எடுக்கப்படும் இந்த நடவடிக்கைக்கு ஐரோப்பிய சமூகம் 10 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிதி மூலம் நீர் வழங்கலை விரைவுபடுத்தும்படி யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் கேட்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் நெடுந்தீவு, அராலி, காரைநகர், வாதரவத்தை, யாழ்ப்பாணம், அனலைதீவு, ஊர்காவற்றுறை, வேலணை, கரவெட்டி, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் நிரந்தர நீர் விநியோகத் திட்டங்கள் அமுல் செய்யப்படும்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் தற்காலிக நீர்த்தாங்கிகளைப் பொருத்தி நாளொன்றுக்கு 5 கோடி லீற்றர் குடி தண்ணீரை வழங்கிவருகின்றது. (இ-9)

## உதவிப்பணம்

தென்மராட்சி, மார்ச் 10

பளைப் பிரதேசத்தில் உள்ள மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் மற்றும் காசநோய், புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தெரிவித்தார். (இ-117)

## பெண் அதிகாரி விசாரணையில்

வவுனியா, மார்ச் 10

விடுதலைப்புலிகளின் பணிப்பின் பேரில் முக்கியஸ்தர் ஒருவரைக் கொல்லத் திட்டமிடுவதில் சம்பந்தப்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் வவுனியாப்பகுதி வங்கி ஒன்றைச்சேர்ந்தபெண் அதிகாரி ஒருவரைக் கொழும்பில் இருந்து சென்ற விசேட பொலீஸ் குழுவினர் கைது செய்துள்ளனர் என கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

படுகொலைத் திட்டங்களைத் தயாரிப்பவர் எனக் கருதப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் அண்மையில் மீரிகாமத்தில் கைது செய்யப்பட்டார்.

அவர் அளித்த தகவல்களை அடுத்தே இந்தப் பெண் அதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

# 78 சனசமூக நிலையங்கள் கடந்தவருடம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

கடந்த வருடம் யாழ். மாவட்டத்திலுள்ள 78 சனசமூகநிலையங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், யுனிசெவ் போன்றவற்றின் உதவியுடன் பிரமான அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியிலிருந்து இந்தச் சனசமூக நிலையங்கள் புனரமைக்கப்பட்டன.

இதேவேளை 60 முன்பள்ளி நிலையங்களும், யுனிசெவ் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஆகியவற்றின் உதவியுடன் புனர் நிர்மானம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ.5)


வாரிவளவு நல்லியக்கச் சபை-காரைநகர்

காரைநகர் க.பொ.த. சாதாரணம் /உயர்தரம்
மாணவர்களுக்கான
வாரிவளவு
அமரர் ஆசிரியர் க. வினாசித்தம்பி அவர்களின்
ஞாபகார்த்த

திருக்குறள் பேச்சுப் போட்டி

விடயம்: "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றையவை"

உயர்தர மாணவர்கள் ஏழு (07) நிமிடம்
சாதாரண மாணவர்கள் ஐந்து (05) நிமிடம்

இடம்: நாவலர் ம. வி. — 1998-04-04
காலை 9-00 மணி

விண்ணப்பம் பாடசாலை அதிபர் மூலம் உறுதிப்படுத்தி 1998-03-31-க்கு முன்பு அனுப்புதல் வேண்டும்.

ச. பத்மநாதன்,
செயலர்,
203/6, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(53942)



V. ARIARATNAM & CO.

CHARTERED ACCUNTANTS

வே. அரியரட்ணம்கம்பனி

பட்டயக் கணக்காளர்கள்

எமது ஸ்தாபனம் மீண்டும் கீழ்க் கண்ட முகவரியில் இயங்குகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

117 (245), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(53951)


## இறை நிறைவில் 3 ஆண்டுகள்



எம்முடன் கலப்பு:
12— 04— 1934

இறைவனுடன் வாழ்வு:
10— 03— 1995

செல்வி பரமேஸ்வரி கந்தையா
[இளைப்பாறிய ஆசிரியை, இளவாலை]

"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாயென்று உறுதியாக நான் உனக்குச் சொல்லுகிறேன்"
—லூக். 23: 43

மூன்று ஆண்டுகள் முழுதாய் போனாலும் இன்றும் பிரிவின் வேதனை, கொடுமை அனைத்தும் உணர்கின்றோம். உடலால் இருந்தாலும் உள்ளத்தில் வாழ்கின்றோம்.
—அக்கா

இறைபதத்தில் நித்திய மலரானாய்; எம் இதயக் கனியில் வாடா மலராகினாய்.

அன்புடன் நினைவு கூரும்:
தம்பி, தங்கைகள்,
குடும்பத்தினர், உறவினர்.

374, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(53948)

## வாழ்த்துகின்றோம்



திரு. ஆ. கதிரவேல்
(இளைப்பாறிய அதிபர், சமூக, சமய சேவையாளர்)
அல்வாய் தெற்கு இலக்குமி இல்லத்தைச் சேர்ந்த
திரு. ஆ. கதிரவேல்

அவர்கள் சமாதான நீதிவானாகப் பதவிப் பிரமாணம் செய்துள்ளமையைப் பாராட்டி அன்னார் இறையருள் பெற்று நீடூழி வாழ இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

அல்வையூர் கவிஞர் நாடக மன்றம் சார்பில்
திரு. மா. அனந்தராசன்
(53959)


தேவை

பெண்கள், சிறுவர்களுக்கான ஆடைகள் தைக்க அனுபவமுள்ள பெண்கள் தேவை.

சக்தி
தையல் நிலையம்,
739A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(53952)



மீன்தூள் விற்பனைக்கு

எமது சங்கத்தில் நாட்பட்ட மீன் தூள் விற்பனைக்குண்டு. இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் எமது களஞ்சியத்தில் மீன் தூளைப் பார்வையிட்டு 14 - 03 – 98 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக விலை விவரங்களைச் சமர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி முத்துவேல் நாகம்மா
(புங்குடுதீவு - 10)

ஒளிகாட்டி வந்தது;
1924—11—24

ஒளிநோக்கி விரைந்தது:
1998—02—08

10—03—1998

சீருற வளங்கொழிக்கும் பொன்கொடுதீவில் தோன்றி, சீரோடு வாழ்ந்து...பாரோடுயாழ்ப்பாணத்தில் சங்கமித்து, அன்பின் திருவுருவாய்வாழ்ந்து, பண்பின் உறைவிடமாய் — வழிகாட்டி வாழ்வில் ஒளியூட்டிய — தாயே! மாதமொன்று சென்றாலும் ஆறவில்லையம்மா — எம்துயர்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"திருத்தணிகை"
இல. 19, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.
(சி/3077)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதானோரைத் தடுத்துவைக்க குடாநாட்டிலேயே சிறைக்கூடம்

## பீரிஸுக்கு ஜனாதிபதி பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதுசெய்யப்படுவோரை அநுராதபுரம் சிறைச்சாலையில் வைப்பதால் ஏற்படும் கஷ்டங்களை நீக்கும் வகையில் யாழ். மாவட்டத்தில் சிறைக்கூடம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸை ஜனாதிபதி கேட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கைது செய்யப்படுபவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் வைக்கப்படுவதால், அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிடுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலை ஒன்றைத் திறக்க வேண்டும் என்றும்—

யாழ். நீதிமன்றங்களில் அவர்கள் தொடர்பான வழக்குகளை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்றும்— ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியை கேட்டிருந்தார்.

அதையடுத்தே ஜனாதிபதி மேற்கண்ட பணிப்புரையை விடுத்துள்ளார். (இ-3)

## தமிழ்த்தினப் போட்டி

யாழ். கல்வி வலயம் இரண்டின் கீழ் உள்ள பாடசாலைகளில் இவ் வருடத்துக்கான தமிழ்த் தினப் போட்டிகளை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகளை எதிர்வரும் மே 7 ஆம் திகதி நடத்துவது என்றும்—

வலய மட்டத்திலான தமிழ்தினப் போட்டிகளை மே 31 ஆம் திகதி நடத்துவது என்றும்— பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-135)

## மானிப்பாய் ப. நோ. கூ. ச. தலைவர் மீண்டும் பதவியில்

சண்டிலிப்பாய், மார்ச் 10

கடந்த ஆண்டில் பயங்கார வாதத் தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் சி, மார்க்கண்டு மீண்டும் சங்கத் தலைவர் பதவியை பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த வருடம் மே மாதம் 29 ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 78 வயதையுடைய சி. மார்க்கண்டு காங்கேசன் துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டார். பின்னர் இவர் அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது இரு வாரகாலம் றிமாண்டில் வைக்க உத்தர விடப்பட்டது. அதனை அடுத்து இவர் கொழும்பு மகஸின் இறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு கடந்த செப்ரெம்பர் மாதம் வரை அங்கு தடுத்து வைக்கப்பட்டார்.

பின்னர் மீண்டும் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது 2 ஆயிரத்து 500 ரூபா பிணையில் விடப்பட்டார். கடந்த டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி நீதிமன்ற வழக்கு தவணைக்கு இவர் ஆஜாரான போது குற்றமெதுவும் சாட்டப்படாத நிலையில் நீதிபதி இவரை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார்.

யாழ். திரும்பிய இவர் கடந்த மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் சங்கத்தில் தலைவர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். 14வருடகாலம் மானிப்பாய் கிராமசபைத் தலைவராகவும் இவர் பணியாற்றியிருந்தார். (அ-135)

## விவசாயிகள் சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

விவசாயிகளின் நன்மை கருதி ஊர்காவற்றுறை புளியங்கூடல் பகுதியில் விவசாயிகள் சங்கம் ஒன்று ஈ. பி. டி. பி. அமைப்பினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி. தீவக அரசியல் அமைப்பாளர் என். மனோ இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களை சங்க நிர்வாகிகளிடம் வழங்கினார் (இ-5)

## பொன்விழாவும் வெள்ளிவிழாவும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

நெல்லியடி சனசமூக நிலையத்தின் பொன்விழாவும், நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபையின் பாலர் பாடசாலையின் வெள்ளிவிழாவும் எதிர்வரும் புத்தாண்டு தினத்தில் கொண்டாடப்பட உள்ளன.

இதனையொட்டி உதைபந்தாட்டம், கிரிக்கெட், கல்விசார் போட்டிகள், மற்றும் விளையாட்டுப்போட்டிகள், கலை நிகழ்வுகள், மலர் வெளியீடு என்பனவும் இடம்பெறவுள்ளன. மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (இ-9-8)

# எமது தமிழ் மொழியின் ஆற்றல் வேறு மொழிக்குச் சளைத்ததல்ல

## பரிசளிப்பு விழாவில் ஆயர் ஜெபநேசன்

யாழ்ப்பாணம், மார்ச் 10

''தமிழ் மொழியினுடைய ஆற்றல், கம்பீரம், சிறப்பு எந்த மொழிக்கும் இல்லை. அது வேறு எந்த மொழிக்கும் சளைத்ததல்ல. ஆங்கிலக் கல்வியைக் காட்டிலும் தமிழ்க்கல்வியே என்னுடைய முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது.''

தென்னிந்திய திருச்சபை ஆயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்திய பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

ஆயர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சாதாரண ஆசிரியராக இருந்த நான் இன்று ஆயராகியுள்ளேன் என்றால் அதற்கு காரணம் தமிழ் மொழிதான் என்று கூறுவேன். தமிழ் படிப்பது இழுக்கு என்றொரு காலம் இருந்தது; இன்று அதுமெல்ல மெல்ல அருகிவிட்டது.

தென்னிந்தியாவிலுள்ள பல்கலைக்கழக துணை வேந்தர்கள் அனைவரும் தமிழ் அறிஞர்களாகவே இருக்கிறார்கள். அங்கு ஆரியமும் தமிழும்முரண்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஆரியமும் தமிழும் கைகோர்த்து நிற்கின்றன. இந்நிலை மிகவும் போற்றுதற்குரியது — என்றார்.

வித்துவான் க. சொக்கலிங்கம்தமது தலைமையுரையில்—

சென்ற காலப்பெருமையையும், நிகழ்காலச் சிறப்பினையும் எதிர்காலச் சந்ததிக்கு கொடுக்க வேண்டும் என்ற நிலையில் நாம் செயற்பட வேண்டும். இன்றுஎமது மாணவர்களின் தமிழ்மொழி அறிவு மிகவும் வீழ்ச்சியடைந்து விட்டது.

எமது பிரதேசத்தில் உள்ள பாடத்திட்டத்தினைமுழுமையாகப் போதிக்கக் கூடிய திறமையுள்ளவர்கள் குறைவாகவேகாணப்படுகிறார்கள். இந்நிலையை நீக்கி தமிழ் மொழியை முழுமையாகக் கற்க கூடியக் நிலையை ஏற்படுத்த வேண்டும். பழந்தமிழ் இலக்கியங்களையும் சேர்த்து பூரணத்துவமான தமிழ்க் கல்வியை மாணவர்களுக்கு வழங்கவேண்டும். தமிழைப் பூரணத்துவமாக கற்ற ஆசிரியர் பரம்பரையை உருவாக்கி அவர்கள் ஊடாக எமது மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் — என்று சொன்னார்.

வலய மட்டத்தில் முதற் பரிசு பெற்ற மாணவர்களுக்கு தங்கப்பதக்கமும், ஏனைய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

விழாவில் மூத்த அறிஞர்கள் மூவர் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகருக்கு 'மகாவித்துவான்' பட்டமும், பண்டிதர் மு. கந்தையாவுக்கு 'பண்டிதமணி' பட்டமும் பண்டிதர் அ. ஆறுமுகத்துக்கு 'புலவர்மணி' பட்டமும் வழங்கப்பட்டன.

மேற்படி சங்கச் செயலாளர் ம. ந. கடம்பேஸ்வரன் பெரியார்கள் கௌரவிப்பு பற்றிய தமது சிறப்புரையில்—

ஆயிரம் பிறை கண்ட இந்த மூன்று அறிஞர்களையும் பாராட்டி பட்டம் வழங்கிக் கௌரவிப்பதில் நாம் பெருமையடைகிறோம் — என்றார்.

விழா இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன, (அ-5)

# செய்திக் கொத்து

## பாதுகாப்பு நிதியம் அன்பளிப்பு

நவாலி, மார்ச் 10

வன்னிப் பகுதியில் இருந்து வந்து யாழ். குடாநாட்டில் மீண்டும் குடியமர்ந்த 18 வயதுக்கு உட்பட்டவர்களைக் கொண்ட வறுமைக் கோட்டுக்கு உட்பட்டு வாழ்கின்ற குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் பாய் மற்றும் சமையற் பாத்திரங்கள், பெட்சீட் என்பவற்றை இலவசமாக வழங்கியுள்ளது. (இ-100-9)

## குடிதண்ணீர் தட்டுப்பாடு

குருநகர், மார்ச் 10

குருநகர் பொதுச்சந்தையில் குடி தண்ணீருக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இச்சந்தையின் சுற்றாடலில் உள்ள கிணற்று நீர் மிகவும் அசுத்தமாகக் காணப்படுவதாகவும் —கடும் வரட்சி நிலவுகின்ற இக் காலப்பகுதியில் குடி தண்ணீர் மிகவும் அவசியம் எனவும் அங்குள்ள விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (இ-51-9)

## பதிவாளர் இடமாற்றம்

யாழ். மாவட்ட நீதிமன்றப் பதிவாளராகக் கடமையாற்றி வந்த அண்ணா இராஜேந்திரம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-9-5)

## கொடுப்பனவு விண்ணப்பம் செயலகத்தில்

அச்சுவேலி, மார்ச் 10

யாழ்ப்பாணம் - பச்சிலைப்பள்ளி உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அதிகாரிகள், ஊழியர்கள் தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவு தொடர்பான படிவங்கள், விவரங்கள் என்பன யாழ். செயலக தேர்தல் அலுவலகத்தில் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. (இ-9-11)

## கோழித்தீன் விநியோகம்

நவாலி, மார்ச் 10

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் கிளை அங்கத்தவர்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் கோழித்தீன் விநியோகம் செய்து வருகின்றது. (இ-100-9)

## பி. செயலகத்துக்கு விரைவில் கணனி

யாழ்ப்பாணம், மார்ச் 10

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் விரைவில் கணனி மயப்படுத்தப்படவுள்ளது.

சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் இதற்கான கணனிகள் வரவழைக்கப் படவுள்ளதாகவும் —

வெகுவிரைவில் இது நடைமுறைப்படுத்தப் படுமெனவும் பிரதேசசபை வட்டாரத்தில் இருந்து தெரிய வந்தது. (இ-15)

## போட்டியில் 3 ஆம் இடம்

மகளிர் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் மகளிர் வெளிவிவகார அமைச்சினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஜி. சீ. ஈ. சாதாரண வகுப்பில் கல்வி கற்கும் தர்சினி நவரத்தினம் என்ற மாணவி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். (இ-5-9)

## நூலகர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம். மார்ச் 10

வடக்கு -கிழக்கு மாகாண சபைப் பிரிவில் தரம் III நூலகர்களுக்கான பதவி வெற்றிடங்கள், பல வருடகாலமாக நிரப்பப்படாத நிலையில் உள்ளன. (இ-15)

## இலக்கத்தகடு விநியோகம்

தென்மராட்சி மார்ச் 10

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் இவ் வருடத்துக்கான சைக்கிள் இலக்கத் தகடுகள் வழங்கப்படுவதாகவும்—

பளையிலுள்ள பிரதேச சபை தலைமை அலுவலகத்திலும், முகமாலை உப அலுவலகத்திலும் சைக்கிளுகளுக்கான இலக்கத் தகடுகளை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் பிரதேசசபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். ( இ-117 )

## முத்திரை தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். நகரில் உப அஞ்சல் அலுவலகங்களில் முத்திரைகள், கடித உறைகள் என்பவற்றுக்கு பெருந் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. (இ-103-9)

## ஆசிரியர் நியமனம்

தென்மராட்சி. மார்ச். 10

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் பட்டதாரி பயிலுநர்களாகப் பணியாற்றி இதுவரை நியமனம் கிடைக்காத 19 பேருக்கு பட்டதாரிஆசிரியர்நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும்—

இது தொடர்பான கடிதங்கள் யாழ். செயலகத்துக்கு கிடைத்திருப்பதாகவும் தெரியவருகிறது. (இ-9-117)

## ஆங்கில வகுப்பு

தென்மராட்சி, மார்ச் 10

சாவகச்சேரி ஸ்ரீ பகவான் சாயிபாபா சமித்தியினர் அப்பகுதி மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்பு ஒன்றினை ஆரம்பித்துள்ளனர்.

பிரதி சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும் இவ் வகுப்புகளில் பங்குபற்ற விரும்புவோர் சமித்தி தலைவர் எஸ். கருணானந்தனுடன்தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ-117-9)

## சுகாதார நிலையம் அமைக்க முயற்சி

நல்லூர், மார்ச் 10

முருங்கையப்புலம், குளமன்கால், தெல்லிப்பழை கிழக்கு ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்கு, வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. (இ-103-9)

## கூ. சங்கங்கள் அமைக்கப்படும்

அரியாலை, மார்ச் 10

யாழ். மாவட்டத்தில் புதிதாக கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றை ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் முகாமைத்துவ கூட்டுறவுச் சங்கம், சிறுகைத் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், நூல்வெளியீட்டாளர் கூட்டுறவுச் சங்கம் போன்ற கூட்டுறவுச்சங்கங்கள்அமைக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தெளிவாகப் பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் பார்ப்பதற்குப் புதிய அன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களை திருத்தி பொருத்துவதற்கும் பூஸ்ரர்களை பழுதுபார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் (B. Sc) (Ceylon) Dip in Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாக விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி-3068]

### SPOKEN ENGLISH

ஆரம்பத்திலிருந்து A/L சித்தியடைந்த மாணவர்களுக்கும், வெளிநாடு செல்பவர்களுக்கும், O/L, ஆண்டு 6—10 மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும். ஆசிரியர், இல. 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (53950)

### தவறிவிட்டது

கந்தையா தர்மலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (420393032V), விசேட அடையாள அட்டையும் 6-3-98 அன்று வெள்ளாந்தெரு கொட்டடிக்கும், திருநெல்வேலிச் சந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 10, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (53945)

முத்துலிங்கம் சிவஞானம், மணியகாரர் வீதி, தெல்லிப்பழை கிழக்கு. என்னும் பெயர், முகவரியுடைய விசேட அடையாள அட்டை [இல. 0907020280] 09-02-98 அன்று நாவற்குழிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். ரூபி ஜுவலறி, 111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (53949)

## நாற்று விற்பனை

அச்சுவேலி, மார்ச் 10

புத்தூர் கமநல கேந்திர நிலையம் நல்ல இன கத்தரி நாற்றுக்களை அப் பகுதி விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்கி வருகின்றது. (இ-11-9)

## வர்த்தக சம்மேளனம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். மாவட்ட வர்த்தக சம்மேளனம் யாழ். செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் சகல பகுதிகளும் இயங்கும் வர்த்தகர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த வைபவத்தில் யாழ். அரச அதிபர் ச. சண்முகநாதன பங்கு கொண்டார்,

தற்காலிக குழு ஒன்று அமைக்கப்பட்டது.

ஏப்ரல் மாதத்தில் நிரந்தர நிர்வாகிகளை தெரிவு செய்வதென முடிவு செய்யப்பட்டது. (இ-3)

15, 16, 17, 18 ஆம்
புலமைப்பரிசில்
வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம்.
மாதாந்த பயிற்சிப் பரீட்சை
12-03-1998 இல் (POYA)
BOND யாழ். நகர்
(53936)

## தையற் பயிற்சி

தென்மராட்சி, மார்ச் 10

பளைப் பிரதேசத்தில் நெசவுத் தொழிலை விருத்தி செய்யும் பொருட்டு பளைப் பிரதேச செயலகத்தினால் நெசவுப் பயிற்சி வகுப்பொன்று விரைவில் புலோப்பளையில் நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (இ-117)

# பாடசாலைகளை பழைய இடத்துக்கு மாற்றாவிட்டால் எதிர்ப்புப் பேரணி

## பிரதேச சபைத் தலைவர் எச்சரிக்கை

மல்லாகம், மார்ச் 10

''பாடசாலைகளின் இரண்டாம் தவணை ஆரம்பிக்கும் வேளையில், சித்திரைப் புத்தாண்டுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மட்டுமல்ல ஏனைய கல்லூரிகளும் பழைய இடங்களில் இயங்க அனுமதி மறுக்கப்படுமானால் பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் அடங்கிய பேரணி ஒன்றை நானே தலைமை வகித்து நடத்த உள்ளேன்.''

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி. வடக்கு பிரதேசசபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் மேற்சண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் எஸ். புண்ணியசீலன் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டு நிகழ்வில் ஸ்ரீபாஸ்கரன் தொடர்ந்து பேசுகையில்—எமது மாணவர்களுக்கு ஆங்கிலக்கல்வி அவசியம் தேவை. ஆங்கில அறிவை எவ்வளவு கூடுதலாகப் பெறுகிறார்களோ, அது வெளிநாடுகளில் அவர்களது வேலை வாய்ப்புக்கு உதவுவதாக அமையும்.

வடக்கு – கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறும்போது தமிழர் விடுதலைக் கூட்டணியும் போட்டியிட்டு அதில்வெற்றி அடையும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஆட்சி அமைக்கும் போது, படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் குறைந்தது மூன்று வருடத்துக்குள் உரிய வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்போம்.

நிம்மதியற்ற இராணுவ ஆட்சியில் நாம் எவ்வளவு காலத்துக்கு இருக்க முடியும், கூடிய விரைவில் மக்கள் வலி. வடக்கில் உள்ள தமது சொந்த இடங்களுக்கு செல்வதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து அவர்கள் திரும்பும் வரை நாம் ஓய மாட்டோம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடும் இதுவே— என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, தெல்லிப்பழை கல்விக்கோட்ட பிரதிப் பணிப்பாளர் ஆ. கமலநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள்.

இல்ல விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் பரிசில்கள் வழங்கினார். (இ-86)

## 31 ஆம் நாள் நினைவலை



தோற்றம்: 16 — 09 — 1938

மறைவு: 08 — 02 — 1998

### அமரர் இராமு குணரட்ணம்

(முன்னாள் கூட்டுறவு முகாமையாளர்)

துணையாக நின்று துணிவுதந்து வழிகாட்டி
நினையாத வேளையில் நீங்கள் பிரிந்திடினும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சைவிட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

இல. 9, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

(53941)

## 3ஆம் வருட நீங்காத நினைவலைகள்



### செல்லப்பா சோமலிங்கம்

(அதிபர், யா/ குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம்)

அன்னை மடியில்: 20—06—1932

அரனடியில்: 13—02—1995

திதி: திரயோதசி 10—03—1998

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து, இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்ம சாந்திக்காகத் தினந் தினம் இறைவனைப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(53926)

அகில இலங்கை அரச சேவை
சித்த ஆயுர்வேத வைத்திய
அதிகாரிகள் சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டம் - 1998

இடம்: யாழ். மாநகரசபை சித்த ஆயுர்வேத பிரதான வைத்தியசாலை மண்டபம், நல்லூர்.

காலம்: 12 - 03 - 98 காலை 10 மணி

★ இறைவணக்கம்
★ தலைமையுரை
★ செயலாளர் அறிக்கை
★ பொருளாளர் அறிக்கை
★ வினைத்திறமை காண் தடைப்பரீட்சை (வாய்மொழி) பற்றியது.
★ இடமாற்றங்கள்
★ புதிய உத்தியோகத்தர் தெரிவு
★ பிறவிடயங்கள்
★ நன்றியுரை

சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் கூட்டத்திற்கு தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இ. கனகலிங்கம்,
செயலாளர்.

(53947)

## நிறுவுநர் தினம்

யா/நாகேஸ்வரி வித்தியாசாலை சுன்னாகம்
(10—03—1940—10—03—1998)



அமரர்

### வி. சிவசுப்பிரமணியம் J.P

(B.A., B.Sc., P.G.T, F.R.G.S)

(முன்னாள் அதிபர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

நிறுவுநர் நாளாகிய இன்றைய தினத்தில் அன்னாரை நினைவு கூருகின்றோம்.

கலாநிதி S. சிவானந்தராசா
(M. B. B. S. (Ceylon), Council Memper - இலங்கை பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)
சகோதரர்கள், குடும்பத்தினர்.

Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(53944)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சறுக்கு மரம்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சி இப்போதைக்குக் கைகூடும் என்று எள்ளளவும் எண்ண முடியவில்லை. சறுக்கு மரத்தில் ஏறும் விளையாட்டுப்போல, கீழே வருவதையே காண முடிகிறது.

ஆளுங்கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்று மாறி மற்றையது, காலத்தைக்கடத்தும்உத்திகளையும் செயற்பாடுகளையும் அவிழ்த்து விடுகின்றன. அதே வேளையில் ஒரு சாரார் மீது மறுசாரார் குற்றஞ் சுமத்துவதிலும் கண்டனப் பிரசாரம் செய்வதிலுமே காலம் கரைகிறது.

அரசு முன்வைத்துள்ள— நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள— அதன் யோசனையை முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சி கால் தடக்குப் போடுகிறது என்றவாறு ஜனாதிபதியும் அரசுப் பிரமுகர்கள் ஏனையோரும் சாடி வருகிறார்கள்.

ஆனால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பைப் பெறுவதில் அரசு தரப்பு அக்கறையுடன், நேர்மையுடன் செயலாற்ற வில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் சொல்கிறார்கள்; கண்டிக்கிறார்கள்; குற்றஞ் சுமத்துகிறார்கள்.

நாட்டைப் பேராபத்திலிருந்து காப்பாற்றுதற்கு, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அரசு பகீரதப் பிரயத்தனம் செய்துவரும் வேளையில், எதிர்க்கட்சியினர் தேவையற்ற விமர்சனங்களைச் செய்து வருவதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இதே வேளை —

நாட்டு நலனில் நமக்கு மிகுந்த அக்கறை உண்டு பொறுப்புஉண்டு. ஆனால்; இனப்பிரச்சினைக்குப் போர் மூலம் தீர்வா, பேச்சுவார்த்தை மூலம் தீர்வா என்பதனை அரசு தான் முடிவு செய்ய வேண்டும் — என்று கூறி அவர் பந்தை முழுதாக அரச தரப்பின் ஆடுதளத்திற்குள் எறிந்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கா.

இவ்வாறு இரு சாராரும் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருக்க, காலம் கடந்து கொண்டிருக்கிறது. பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்ற நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சி நசிந்து கொண்டிருக்கிறது.

அரசாங்கமும் சரி, பிரதான எதிர்க்கட்சியும் சரி, இனப்பிரச்சினையைத் தீர்த்து, நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் உண்மையான, விசுவாசமான, நேர்மையான அக்கறை கொண்டிருப்பின்—

இது விவகாரத்தில் எதிரும் புதிருமாக, கீரியும் பாம்புமாக இரு சாராரும் செயற்படக் கூடாது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அரசு உண்மையாக இருந்தால்—

அரசு போரை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இந்த இரண்டும் செயல் வடிவம் கண்டாலே, இந்த இரு படிகளையும் தாண்டினாலேயே, தீர்வு முயற்சியை சறுக்கி விழுத்தாமல் மேலே உயர்த்திவிட சாதகநிலை தோன்றும்.

# அதிபர்கள் சமூகத் தலைவர்களாகச் செயற்படும் வாய்ப்பு இன்றைய சூழ்நிலையில் உண்டா?

யாழ்ப்பாண மாவட்ட அதிபர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கு வலய ரீதியாக நடைபெற்று வருகிறது. இதேவேளை கோட்டக்கல்விப் பணிப்பாளர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கும் நடைபெறுகிறது.

பாடசாலை அதிபர்களின் இன்றைய நிலையை விளக்குகிறது இக்கட்டுரை.

நாம் 21 ஆம் நூற்றாண்டில்காலடியெடுத்து வைக்கின்றோம். கல்வியுலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கக்கூடிய தகுதி வாய்ந்த அதிபர்கள் தேவைப்படுகிறார்கள். கடந்த காலத்தில் பெற்ற கசப்பான அனுபவங்களின் விளைவாக நல்லதிபர்களின் தேவைகருதி பாடசாலை ஆதார முகாமைத்துவம் (School Base Management) பற்றிய கருத்து கல்வி மேலாளர்களினால் முன்மொழியப்பட்டுள்ளது. கல்வியியலாளர் தேசிய இலக்குகளை முன்வைத்துள்ளனர்.

தேசிய இலக்குகளை எய்துவதற்கு முதற்றர முகாமையாளர்களான, சுயாதீனமான செயற்படுந்திறன் வாய்ந்த அதிபர்கள் பற்றிய

கு. சண்முகநாதன்
(அதிபர் தரம் I)

கருத்து வலுப்பெற்று வருகிறது. கடந்த இருதசாப்தங்களாக பாடசாலைகள் தனித்துவத்தை இழந்துவிட்டன. அதிபர் சுதந்திரமான முறையில் செயற்படுவதில் உண்டானஇடர்ப்பாடுகளும், தடைகளுமே இந்நிலைக்குக் காரணமென உணரப்பட்டுள்ளது.

பாடசாலை ஒரு மாதிரிச் சமூகம். சமூகம் தான் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ளுந்திறன் வாய்ந்த சமூக உறுப்பினர்களை உருவாக்கித் தரும் பொறுப்பினைப் பாடசாலையிடம் ஒப்படைத்திருக்கிறது. சமூகத்தின் பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வுக்களம் பாடசாலையே. இத்தகைய கருத்தினை ஜோன் டூயி என்றகல்வியியலாளர் முன்வைத்தார். பாடசாலையின் தலைவர் என்ற முறையில் இப்பாரியபொறுப்பினை ஏற்றுள்ளவர் அதிபரே. அப்பொறுப்பினை சரிவர நிறைவேற்றத்தக்க வாய்ப்புக்களை சமூகம் அதிபருக்கு வழங்க வேண்டும். சமூகம் முழு நம்பிக்கையுடன் பொறுப்பை அதிபரிடம் ஒப்படைக்காத வரை அதிபரால் தன்பணியைச் செவ்வனே நிறைவேற்றமுடியாது.

கடந்த இரு தசாப்தங்களாக அதிபர்களுக்கு உரிய பொறுப்பு ஒப்படைக்கப்படவில்லை. அதிபர்கள் சுதந்திரமான முறையில் கருமமாற்ற முடியாத வகையில் குறுக்கீடுகள் பல கோணத்தில் நிலவியதை யாவரும் உணர்வர். ஆனால் எவரும் வெளிப்படையாக இதனை ஒத்துக்கொள்ளத் துணியமாட்டார்கள். மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் அதிபர்களுக்கு உரிய சமூகக் கௌரவம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று கௌரவம் இல்லை. அதே வேளை பொறுப்புக்களை சரிவரக் கையளிக்காமலே அதிபர்களைக்குறை காணும் தவறான நடைமுறை பின்பற்றப்படுகிறது.

தனிப்பட்ட முகாமையாளர்களின் கீழ் பாடசாலைகள் இயங்கி வந்த காலம் வரை அதிபர்கள் சுதந்திரமாகக் கருமமாற்ற முடிந்தது. இதனால் பாடசாலைகள் வெற்றிகரமாகச் செயற்பட்டன. சமூகம் முழுப்பயனை அடைந்தது. அதிபர்கள் பாராட்டுக்குரியவர்களாக விளங்கினர்.

### தலையீடுகள் அதிகரித்தன

ஆனால் பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டதன் விளைவாக அதிபர்களது தனித்துவமான செயற்பாடுகள் ஒதுக்கப்பட்டன. பல்வேறு தலையீடுகள் அதிகரித்தன. இதன் விளைவாகப் பல பாடசாலைகள் செயலிழந்தன. ஒரு சில பாடசாலைகள் வலுப்பெற்றன. இதனைக் கல்வியியலாளர்கள் சரிவர உணர்ந்தமையினாலேயே S.B.M பாடசாலை ஆதார முகாமைத்துவம் முன் மொழியப்பட்டுள்ளது. இதனை கல்வி ஆர்வலர்கள் வரவேற்கப் பெரிதும் கடைமைப்பட்டுள்ளனர். தனிப்பட்ட முகாமையாளர்களின் கீழ் பாடசாலையின் பௌதிக வளம், ஆசிரிய ஆளணி என்பன நிறைவு செய்யப்பட்டிருந்தன. வளத்தினை ஒருங்கிணைத்து திட்டமிட்டுசெயலாற்றும் சுதந்திரம் அதிபர்களுக்கு இருந்தது.

- ★ ஒரு பாடசாலை அதிபர் நடைமுறையில் முதற்றர முகாமையாளராகச் செயலாற்றுவதற்கு எத்தகைய இடர்ப்பாடுகள் உள?
- ★ நல்லதிபர்களைக் காணமுடியவில்லை என்ற ஆதங்கம் நியாயமானதா?
- ★ பாடசாலை ஆதார முகாமை (K. B. M.) பற்றிய கல்வி அமைச்சின் முன்மொழிவின் உள்நோக்கு என்ன?
- ★ அதிபர்கள் முழுமையான செயற்பாடுடையவர்களாக செயற்பட வழி என்ன?
- ★ கல்வி இலக்கினை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்ள அதிபர்கள் எத்தகைய வாய்ப்பினை பெற்றிருக்க வேண்டும்?
- ★ பொறுப்புக்கள் யாரிடமோ? பழிமட்டும் அதிபர் தலைமேல்... இது யதார்த்தமா?
- ★ 21 ஆம் நூற்றாண்டில் கல்வியுலகம் எத்தகைய அதிபர்களை எதிர் நோக்குசிறது?

அதிபர்களது செயற்பாடு பல்வேறு வகையில் ஊக்குவிக்கப்பட்டது. ஆசிரியர்கள் அதிபர்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றும் வாய்ப்பு முடுக்கி விடப்பட்டிருந்தது. இதனால் பாடசாலைகள் செயற்றிறன் பெற்று விளங்கின. அதிபர்கள் புகழ் பூத்தவராயினர். சமூகம் பாடசாலையின் முழுப்பயனை அனுபவித்தது. பாடசாலையின் குறிக்கோளுக்கமைய முகாமையாளர்கள் செயற்பட்டனர்.

சுருங்கக் கூறின் முழுச் சமூகமும் அதிபரின் தயவை நாடியிருந்தது. இன்றோ அதிபர்,பலரின் தயவில் வாழ வேண்டியிருக்கிறது. பலரின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கியே பாடசாலையை நடத்த வேண்டிய நிர்ப்பந்தமுள்ளது. இந்நிலையில் நல்லதிபர்களைக் காணமுடியவில்லையே என்று ஏங்குவது மிகமிக வேடிக்கையானது. இந்த ஏக்கத்தினை நீக்கும் ஒளிக்கீற்றாக SBM பற்றிய முன்மொழிவு தோற்றம் பெற்றிருக்கிறது.

ஒரு மாணவனை வினைத்திறன், விழிப்புணர்வு, பரஸ்பர ஒத்துழைப்பு, சமூகப் புரிந்துணர்வு ஆகியவற்றுக்குட்படுத்துவதே பாடசாலையின் பொறுப்பு. இப்பொறுப்பினை ஏற்றவரே அதிபர். முழு ஆளுமை வளர்ச்சியினை மாணவனிடத்தே ஏற்படுத்துவதே அதிபரின் பணி. சமூகநீதியின் பிறப்பிடமே பாடசாலை. கல்வி என்பது சமூகத்தின் கலங்கரை விளக்கம், அரசு பெருந்தொகைப் பணத்தைக் கல்விக்குச் செலவிடுவதன் நோக்கமே, நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சஞ்சீவியாகக் கல்வியைக் கருதுவதேயாகும்.

தேசியகல்வி ஆணைக்குழு இலங்கையின் சகல அரசியல் மனிதாபிமான பிரச்சினைகளையும் கல்வியின் மூலம் தீர்வுகாண விரும்புகிறது. தேசிய இலக்கினை அடைய ஆசிரியர்களைத் தயார்படுத்த எண்ணுகிறது. ஆசிரிய வாண்மை விருத்தி செய்யப்பட்டாலும் அவர்களை வழிநடத்தும் பொறுப்பு அதிபருக்குரியதே. இவ்வகையில் அதிபர் பணி மிகப் பொறுப்பு வாய்ந்த ஒன்றாகிறது.

### அதிபர் தெரிவு முறை

கடந்த இரு தசாப்தங்களாக அதிபர் பணி பொதுப் பரீட்சைகள் வைத்தே மதிப்பீடு செய்யப்பட்டது. மாணவர்களது பரீட்சை முடிவுகளை வைத்து அதிபரின் திறன் கணிக்கப்படுகிறது. இத்தகைய மதிப்பீடுகள் மிக மோசமான கல்விச் சீரழிவிற்கு இட்டுச் செல்கிறது. பரீட்சை மையமான மதிப்பீடு 6 வீத மாணவரின் வாழ்விற்கே வழி செய்கிறது எனக் கல்விபற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. ஏனைய 94வீத மாணவர் பற்றி எவரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அதிபர்கள் இவர்களது நிலைக்கு வகை கூறும் நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள வழி சமைக்கப்பட்டுள்ளது, எதுவித கணிப்பு மற்று பாடசாலையிலிருந்து விலகும் 94வீத மாணவர்களே நாட்டுக்குப் பெருந் தொல்லை தருபவராவர். அதிபர்கள்கடந்த காலத்தில் இத்திய விளைவிற்கு காரணமாகச் செயற்படும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அதிபர்கள்தெரிவின்போது கல்வித்தகைமை, ஆழ்ந்த புலமை, அனுபவ முதிர்ச்சி, சேவைக்கணிப்பு இவைகளுக்கு போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. இவ்வாறு முக்கியத்துவ நிலை கவனிக்காது தெரியப்படும் அதிபர்கள் பாடசாலையை நடத்தும்போது கல்விச் செயற்றிறன்விளையும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

ஒரு சமூகத் தலைவராக செயற்பட வேண்டிய அதிபர் தனது பாடசாலையை இயங்க வைப்பதற்காக பலரிடம் கூனிக்குறுகி நடக்க வேண்டிய இழி நிலைபற்றி எவரும் கவலைப்படவோ, சிந்திக்கவோ முயலவில்லை. ஒரு பாடசாலை அதிபரை வழிநடத்தும் மேலாளர்களாக இன்று பலர் செயற்படுவதை சமூகம் நன்கறிந்தும் அதனை எதிர்க்கத் திராணியற்று வாளாவிருக்கிறது. இத்தகைய மேலாளர்களின் நடவடிக்கைகளை சுயலாப நோக்கோடு ஊக்குவிப்பவர்கள் பலராகின்றனர். எமது பிரதேசத்தில் இத்தகைய மேலாளர்களை ஊக்குவிக்கும் செய்தித் தொடர்பு சாதனங்களும், நிறுவனங்களும் வலுப்பெற்று வருகின்றன.

ஓர் அதிபரின் செயற்பாட்டினை செயலிழக்கச் செய்வதனால் சமூகம் அடையும் தீமைகளை அறிந்தும் அறியாதவர்கள் போல் கல்விமான்கள் நடந்து கொள்கிறார்கள். உயர்கல்வி நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் பலர் இத்தகைய மேலாளர்களாக செயற்பட்டுப் பாடசாலைகளின் உயிர்த்துடிப்பை ஒடுக்கி வருவதை யாழ்ப்பாண மக்கள் அறிவர். எப்படியேனும் ஒரு பாடசாலையின் அதிபர் ஸ்தானத்தில்அமர்ந்துவிடும் நப்பாசையால் இத்தகைய மேலாளர்களை அடிபணியும் அதிபர்கள் பலர் இங்கு உருவாகி வருகின்றனர். இத்தகைய அடிமை மனோபாவத்தால் பெயரளவிலான அதிபர்களாக முடியுமேயன்றி அதிபருக்கான பணியைச் செவ்

(9ஆம் பக்கம் பார்க்க)

## உதயவாக்கு

பாலில் வெண்ணெய் மறைந்திருப்பது போல், மனிதன் உள்ளத்தில் அந்தராத்மா மறைந்து நிற்கிறது. பாலைத் தயிராக்கி அதனைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல, உள்ளத்தைப்பக்குவப்படுத்தி அதனுள் மறைந்திருக்கும் ஆத்மாவைக்கடைந்து திரட்டி எடுக்க வேண்டும்.

— ராஜாஜி —

## நாளை

மாசி 27

புதன்கிழமை

திதி: திரயோதசி
காலை 7.05 வரை
நட்சத்திரம்: மகம்
பிற்பகல்: 4–10 வரை

மாசிமகம்

சுபநேரம்: 4.53 – 6.23
ராகு காலம்: 12.23 –1.53

## தவக்கால சிந்தனை

(14ஆம் நாள்)

இன்று முன்னிருக்கைக்கு முண்டி அடிப்போரே அதிகமாகிவிட்டது. தம்மைத்தாமே பெரியவன் எனக் கூறி மற்றவன்மேல் பல சுமைகளைச் சுமத்திக் கொள்ளும் தலைமைகள் அற்றும் இருந்தன.

அவற்றைக் கண்டு விசனப்பட்ட வார்த்தைகளினூடாக இறைவன் பேசுகிறார்.

"உங்களுள் பெரியவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்பெறுவான்''

பட்டங்கள், பதவிகள் படாடோபங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். போதனையில் நூறும் சாதனையில் பூஜ்ஜியமும் உள்ளோர்மட்டில் கவலை கொள்ளாது உங்கள் பணிகளில் தூய்மையுடன் தாழ்மையில் மற்றவருக்கு உதவுவதில் உங்கள் செயல்கள் சிறக்கட்டும்.

தேடிச் சென்று உதவுங்கள். மற்றவர்பார்க்கவேண்டும் பேசவேண்டும் என எதிர்பார்த்தால் ஏமாந்து போவீர்கள். இறைவன் பார்வை உங்கள் பேச்சில் அல்ல; செயலில்தான்என்பதை நம்புங்கள் செயல்படுங்கள்.

- யோசப் பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியாவில் மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு - ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 10

புதிய கல்வித் திட்டத்தின் கீழ் மூதூரில் நிறுவப்பட உள்ள வலயக் கல்வி நிலையத்தை கிண்ணியாவில் நிறுவுமாறு கோரி கிண்ணியாவில் நேற்று மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கிண்ணியாவைச் சேர்ந்த சுமார் 33 பாடசாலைகளின் மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று கிண்ணியாவில் கடைகள் மூடப்பட்டிருந்தன.

வீதிகளில் வாகனங்கள் ஓடவில்லை.

தமது கோரிக்கை நிறைவேறும் வரை பாடசாலையைப் பகிஷ்கரிக்கப் போவதாக மாணவர்கள் அறிவித்துள்ளனர். (இ)

# தொண்டர் ஆசிரியரை நிரந்தரமாக்க கோரிக்கை

''யாழ்.மாவட்டத்தில் கஷ்டமான காலத்தில் பணியாற்றிய தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர சேவையில் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

மேற்கண்டவாறு வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவராக பதவியேற்கவிருக்கும் சு. ஸ்ரீ பாஸ்கரன் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் இது தொடர்பாக எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கில் உள்ள சகல பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. கஷ்டமான காலத்தில் குறைந்த சம்பளத்துடன் பாடசாலைகளில் தொண்டர் அடிப்படையில் பணியாற்றியவர்களை நிரந்தரமாக்க வேண்டும். இதற்கான பணிப்புரையை வடக்கு—கிழக்கு மாகாணசபைக்கு விடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதி கல்வி, உயர் கல்வி அமைச்சருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (இ-3)

# மேலும் சில கூட்டுறவுச் சங்கங்கள்

அரியாலை, மார்ச் 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக மேலும் சில கூட்டுறவுச்சங்கங்களை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

சுற்றாடல் முகாமைத்துவ கூட்டுறவுச் சங்கம், சிறுகைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், நூல் வெளியிட்டாளர் கூட்டுறவு சங்கம்போன்ற கூட்டுறவுசங்கங்களே அமைக்கப்படவுள்ளன.

இவற்றை அமைப்பதற்கான துரித ஏற்பாடுகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-17)

## கூட்டுறவு ஊழியர்

# விதிமுறைகள் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படும்

அரியாலை, மார்ச் 10

கூட்டுறவு ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கடைப்பிடிக்கும் நடைமுறைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலும் அமுல் செய்யப்படவுள்ளன.

கூட்டுறவு ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட இந்த நடைமுறை விதிகள் சம்பந்தமான சுற்றறிக்கை யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் புதிய பணியாளர்களை எவ்வாறு சேவையில் ஈடுபடுத்துவது, பணியாளர்களுக்கான விடுமுறை, அவர்களின் சேவைக்கான சம்பளங்கள் மற்றும் இதர கொடுப்பனவுகள், கூட்டுறவுச்சங்கங்களின் விதிகளுக்கு மாறாக சேவை புரிந்தால் அதற்கான ஒழுக்காற்றுநடவடிக்கை போன்ற விடயங்கள் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த நடைமுறை கடந்த ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-17)

# லியோ கழகம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

வேம்படி லியோ கழகத்தினர் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் பாவனைக்கென ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (இ-51-9)

# பாலர் கல்வி

செம்பியன்பற்று, மார்ச் 10

வடமராட்சி புலோலிப் பகுதியில் உள்ள பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையத்தினால் பாலர் வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-36)

## மீளக்குடியமர்ந்த

# நெடுந்தீவு மக்களுக்கு ஐ.நா. தூதரகம் உதவும்

இந்தியாவில் அகதிகளாக இருந்து மீண்டும் இங்கு வந்து குடியமர்ந்த நெடுந்தீவு மக்களுக்கு விரைவில் உரிய உதவிகள் வழங்கப்படும்.

மேற்கண்டவாறு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உயர் அதிகாரி பீற்றர் மேயர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், பீற்றர் மேயர், வதிவிடப் பிரதிநிதி ஜோண் டிக்ஸன், திட்ட உத்தியோகத்தர் பெனி புறூன், கள உதவியாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவுக்கு வருகை தந்து இங்குள்ள மக்களின் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தனர்.

நெடுந்தீவு பிரஜைகள்குழு, கிராம அபிவிருத்திச் சபை, சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் யாழ். அரச அதிபரையும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகளையும் சந்தித்து நெடுந்தீவின் முக்கிய தேவைகள் குறித்து உரையாடினார்கள். (இ-111)

# வீடமைப்புக் கடனைச் செலுத்த இயலாதோருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாண மாவட்ட தேசிய வீடமைப்பு திணைக்களத்திடமோ அல்லது தேசிய வீடமைப்பு அதிகார சபையிடமோ வீடமைப்பு கடனைப் பெற்று மீளச் செலுத்த முடியாமல் இருப்பவர்கள் தத்தமது பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

கடந்தகால வன்செயல்களினால் பிரதான உழைப்பாளிகளை இழந்தமை, அல்லது உடல் ஊனமுற்றமையினால் உழைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை, அல்லது பெற்றுக் கொண்ட கடனுடன் தொடர்பான வீடு முற்றாகச் குடியிருக்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளமை போன்ற காரணங்களினால் கடனை மீளச் செலுத்த முடியாமல் இருப்பவர்கள் தொடர்பான தகைமைகளை இனங்காணும் பொருட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தரை சந்திக்குமாறு கோரப்படுகின்றனர்.

ஏற்கனவே இது தொடர்பாக மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டவர்களும் மீண்டும் தமது பிரதேசத்திற்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தரைச் சந்திக்க வேண்டியது அவசியமாகும் என்றும் —

வீடமைப்பு அதிகாரசபையினால் கட்டப்பட்ட வீடமைப்புத் திட்டங்களில் குடியிருக்கும் ஆரம்ப குடியிருப்பாளர்கள் வீட்டின் பெறுமதியை முற்றாகச் செலுத்தி வீட்டின் பூரண உரிமையைப் பெற விரும்பினால் வீட்டின் பெறுமதியின் 25சதவீதம் கழிவாக வழங்கப்படும் சலுகை 1998 ஜூன் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-5)

# நிரந்தரக் கட்டடம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுமார் 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக் கட்டடத்தை அமைப்பதற்கு முன்நடவடிக்கையாக பொருத்தமான காணி ஒன்றினை வாங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (இ-9-15)

# களுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மேலும் ஒரு தொகுதியினரின் பெயர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் அவசரகாலச் சட்டத்தின் கீழும் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் ஒரு தொகுதியினரின் பெயர் விவரங்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணக் கிளைக்குக் கிடைத்துள்ளன.

அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ எம். பாலேந்திரன் — நல்லூர்.
★ எஸ். நற்குணம் — கிளிநொச்சி.
★ எஸ். றெனிசன் றொபேட் — பாஷையூர்.
★ பொன்னையா சத்தியநாதன் — புலோலி தெற்கு.
★ க.பரமேஸ்வரலிங்கம்— காரைநகர்.
★ சண்முகம் குணரத்தினம் — மிருசுவில்.
★ இரத்தினசிங்கம் நடராசசுந்தரம் — புலோலி.
★ கே. ஈஸ்வரன் — கருப்பனை, செறுனப்பிட்டி.
★ சச்சிதானந்தம் சதீஸ்குமார் — செம்பியன்பற்று
★ நற்குணம் மனோரஞ்சன் — மானிப்பாய் தெற்கு.
★ பாக்கியநாதன் சிவகுமார் — மல்லாவி.
★ பூராசா றமேஷ் — மல்லாவி.
★ தங்கவேலு புஷ்பகாந்தன் — வவுனியா.
★ சின்னப்பு செல்லையா — கரவெட்டி கிழக்கு.
★ நாகலிங்கபாலு — வவுனியா.
★ இராசதுரை ஜெயராசன் — இளவாலை.
★ செல்வநாயகம் டிலான் — யாழ்நகர்.
★ கந்தசாமி சுசீந்திரன்— மட்டுவில் வடக்கு.
★ கனகசபைஅருளானந்தசிவம் — கரவெட்டி.
★ சோமசுந்தரம் கிருஷ்ணராமசுந்தரம் — பருத்தித்துறை.
★ சின்னத்தம்பி கிருபானந்தன் — கைதடி மத்தி.
★ பொன்னுச்சாமி இந்திரன்—நீர்வேலி தெற்கு
★ கந்தசாமி மகாதேவன் —வரணி
★ க. மோகன் — தவக்குளம், கொடிகாமம்.
★ லா. ம. ஜோன்சன் — கொழும்புத்துறைவீதி, யாழ். நகர்
★ சிங்கராசா றஜிதகுமார்—அல்வாய் மேற்கு.
★ குமாரவேலு [illegible] யாழ். நாச்சிமார்கோயிலடி.
★ கிருஷ்ணன் இராசலிங்கம்—தவசிக்குளம், மிருசுவில்
★ இராஜசிங்கம் இயேசுசகாயம்—கட்டுடை, மானிப்பாய்.
★ கந்தையா இராசலிங்கம்—சங்குவேலி தெற்கு
★ அப்புத்துரை ஞானகரன்—கோண்டாவில்
★ சிறில் அன்ரனி ஜோர்ஜ் —குருநகர்
★ ம.துரைராசா—தவசிக்குளம், கொடிகாமம்
★ ஜேம்ஸ் சிறிதரன் — தொண்டமானாறு
★ மரியதாஸ் ஜோசப்மென்சன்—குருநகர்
★ தேவதாஸ் மோகனசுந்தரம்—குருநகர்
★ பத்திமாசீலன் அன்ரனி —குருநகர்
★ இராசேந்திரம் ஆதவன் —பருத்தித்துறை
★ மாணிக்கம் சுதாகரன் — விசுவமடு
★ ஆறுமுகம் நந்தபவான் — வரணி
★ பத்மநாதன்பெனடிக்ற் பத்மகுமார்—அராலி மேற்கு
★ கதிரவேலு பாலச்சந்திரன்— கைதடி–நுணாவில்
★ குணசிங்கம் றஜனிகாந் — கல்வயல், சாவகச்சேரி
★ கந்தையா ஜெயலிங் [illegible] காமம்
★ பொ. ஜெகதீஸ்வரன் — தவசிகுளம், கொடிகாமம்
★ கந்தன் கற்கண்டு — கரவெட்டி
★ இரத்தினம் பிரபாகரன் — கோப்பாய் வடக்கு
★ இரத்தினவேல் மகேசன் — அல்வாய் வடக்கு
★ சதாசிவலிங்கம்திவாகர் — நீராவியடி
★ கு. செல்வராஜா — ஜெயபுரம், பல்லவராயன் காடு
★ செல்லையா இராஜேந்திரன் — இராஜேந்திரன் குளம் வவுனியா
★ ந. ரவி — மல்லாவி
★ சதாசிவம் சிவதாசன்— இராமநாதபுரம்
★ ரி.இளங்கோ—பரந்தன்
★ அருளப்பு யேசுதாசன் பிறின்ஸ் குரூஸ் — வங்காலை
★ சிவபாலன் பாரதி — திருநகர், கிளிநொச்சி
★ சந்தம்பிள்ளை சகாயநாதன் — மன்னார்
★ எந்திரராசா யோகேந்திரராசா — றெட்பானா விசுவமடு
★ மார்க்கண்டுஇரஞ்சன், மல்லாவி
★ நற்குணம் ஆனந்தராசா — உருத்திரபுரம், கிளிநொச்சி
★ சந்திரசேகரம்இரத்தினசேகர் — கனகாம்பிகைக் குளம், கிளிநொச்சி
★ தி. அமுதராஜ் —மன்னார்
★ யோகானந்தம் அன்ரன் சுரேஷ்குமார் — புலோலி கிழக்கு
★ கபிரியேற்பிள்ளை அன்டிறூஸ் — மன்னார்
★ சு. டெனிஸ் கட்சன் — வடமூலை, யாழ்ப்பாணம்
★ இரத்தினகுமார் சுரேந்திரன் — மல்லாகம்மத்தி
★ கிட்டினன் நவநீதன் — கரணவாய் மேற்கு
★ யோகேஸ்வரன் இராசகுமார் — பருத்தித்துறை
★ யேசுதாசன் டக்ளஸ் (கமில்ரன்) — குருநகர்
★ நடராசாபுலேந்திரன்— சுன்னாகம்
★ இ. யோகேஸ்வரன் — மல்லாகம்
★ கந்தசாமி லிங்கேஸ்வரன் —கொழும்புத்துறை
★ டோமினிக் குயின்ரஸ் றெஜிரேட் — குருநகர்
★ பஞ்சலிங்கம் அன்புச்செல்வன் — பெரியதம்பிபிரான்கோயிலடி, யாழ்ப்பாணம்
★ பரராஜசிங்கம் பாஸ்கரன் — ஏழாலைமேற்கு
★ தில்லைநாதன் மகேந்திரராசா — உடுவில் கிழக்கு
★ ஐ. தங்கேஸ்வரன் — வரணி
★ இரட்ண சபாபதி சோகனதாஸ் — யாழ். நகர் மேற்கு
★ சபாரட்ணம் நகுலேஸ்வரன் —பிடாரிஅம்மன்கோயிலடி, ஆனைக்கோட்டை
★ எஸ். செல்வசுதந்திரன் — கோண்டாவில் கிழக்கு

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவத்தினர் எனக்கூறி நள்ளிரவு துணிகர திருட்டு!

## ஒருவர் சிக்கினார்! தாய், மகள் காயம்!!

நெல்லியடி, மார்ச் 10

இராணுவத்தினர் எனக் கூறிக் கொண்டு நள்ளிரவு வேளை வீடு ஒன்றினுள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டில் இருந்த வயோதிபப் பெண்ணையும், அவரது மகளையும் தாக்கிக் காயப்படுத்தி தங்க நகைகளை அபகரித்துக் கொண்டு தப்ப முயன்றனர். அவ்வாறு தப்பியோடியோரில் ஒருவர் அயலவர்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். ஏனையோர் தம்வசம் இருந்த பொருள்களை வீசிவிட்டு ஓடித் தப்பிவிட்டனர்.

அல்வாய் வடமேற்கில் துலாப்பிள்ளையார் கோயிலடியில் உள்ள ஒரு வீட்டில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இந்தத் துணிகரத் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:-

இரும்புக்கம்பிகள், பொல்லுகள் போன்றவைகளுடன் வீட்டின் முன்கதவைத் தட்டிப் புகுந்த திருடர்களே அங்கு தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஆண்கள் துணையற்ற இவ் வீட்டில் இருந்த தாயும் மகளும் இரவு வேளை எழுப்பிய அவலக்குரல் கேட்டு அயலவர்கள் உஷாரடைந்தனர். அதனால் திருடர்கள் தமது முயற்சியை தொடர முடியாது தப்பி ஓட முற்பட்டவேளை, அவர்களில் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த வைத்தி பத்மநாதன் (வயது 48) என்பவரே மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவர் பின்னர் வதிரி இராணுவ முகாம் ஊடாக நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். காயங்களுக்கு இலக்கான அவர் மந்திகை மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டு, பின் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

திருடர்களின் தாக்குதலுக்கு இலக்காகி பொன்னையா பாக்கியம் (வயது76) அவரது மகளான, நெல்லியடி மக்கள்வங்கி உதவி முகாமையாளரான திருமதி கணேசலிங்கம் தவமணிதேவி (வயது 48) ஆகிய இருவரும் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

தப்பியோடிய ஏனைய திருடர்களைப் பிடிப்பதற்காக நெல்லியடி பொலீஸார் வலை விரித்துள்ளனர்.

இவ் வீட்டில் திருடர்களினால் கைவிடப்பட்ட பயணப்பை, இரும்புக்கம்பி, தேசிய அடையாள அட்டை ஒருவகைபவுடரின், 3 சோடி பாட்டா செருப்புகள், ஒரு தொப்பி என்பனவற்றை நெல்லியடி பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதே சமயம், இந்த வீட்டிற்கு அருகில் உள்ள ஆலய பூசகர் ஒருவரின் வீட்டிலும் கடந்த வெள்ளிக்கிழமை உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்து குடம், வாளி, புதிய கேற், புதியசைக்கிள் என்பனவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இது குறித்து அந்த வீட்டின் உரிமையாளர் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் புகாரிட்டுள்ளார்.

(ஐ-109-15-139)

## நூல் அறிமுக அரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீ கணேசனின் ''யாழ்ப்பாணத் தமிழ்நாடக அரங்கு —விமர்சனக் கட்டுரைகள்'' என்னும் நூல் அறிமுக அரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இணுவில்மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெறும்.

இணுவில் கலை இலக்கிய வட்டமும், தெஸ்பியன்கலை வட்டமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வுக்கு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா தலைமை வகிப்பார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் நூல் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

கவிஞர் சோ. பத்மநாதன், சிரேஷ்ட விரிவுரையாளர் செ. கிருஷ்ணராசா ஆகியோர்கருத்துரைவழங்குவர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி பிரதி அதிபர் வே. தம்பாப்பிள்ளை, மேலதிகஅரச அதிபர் து. வைத்திலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். விமர்சன உரைகளும், கலை நிகழ்வாக நாடகமும் இடம்பெறும்.

(ஐ)

## பயணிகள் கப்பல் சேவை திட்டமிட்டபடி நடக்கும்

கொழும்பு, மார்ச் 10

திருகோணமலை — காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 14 ஆம், 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

''லங்கா முடித'' சரக்குக் கப்பலே இப் பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களில் தற்போது தங்கியுள்ள மக்களை இச்சேவை மூலம் அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கு இச்சேவையில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. (ஐ-21)

## சிறுமியை பூரான் தீண்டியது

நெல்லியடி, மார்ச் 10

வடமராட்சிப் பகுதியில் நேற்று அதிகாலை மேலும் ஒரு சிறுமி வெள்ளைப் பூரான் பூச்சியினால் கடியுண்டார்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் அல்வாய் கிழக்கில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வேலுப்பிள்ளை வெண்மதி (வயது 8) என்னும் சிறுமியே பூரான் பூச்சியினால் கடியுண்டு மந்திகை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-190)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஸ்ரான்லி வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரும், யாழ். பல்கலைக்கழக வர்த்தகப் பிரிவு விரிவுரையாளருமான கந்தையா தேவராசன் (வயது-48 கோண்டாவில்) மோட்டார் சைக்கிளில் அமர்ந்து சென்றவரான யாழ். பல்கலைக்கழக பொருளியல் விரிவுரையாளர் கார்த்திகேசு சண்முகநாதன் (வயது-65 சுதுமலை) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிளுடனேயே இவ் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-15-139)

## அதிபர்கள்...

(ஏழாம் பக்கத் தொடர்)

வனே ஆற்றமுடியாது என்பதை நடைமுறையில் காணலாம். கல்வியுலகம் வெட்கித் தலைகுனியக் கூடிய இத்தகைய செயல்களால் கல்விச் சமூகம் பெரும் பாதக நிலைக்கு இட்டுச் செல்லப் படுகிறது.

### ஆதார முகாமையின் நோக்கம்

பாடசாலை ஆதார முகாமை பற்றிய கல்வியமைச்சின் முன்மொழிவு அதிபர்களின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு வழி செய்யும் நோக்கத்தினைக் கொண்டது. இதன் மூலம் பாடசாலைகளின் தனித்துவம் பேணப்படும். அதிபர்களது ஆளுமை வரவேற்கப்படும். வளங்கள் பாதுகாக்கப்படும். பல பாடசாலைகள் முழுமையான செயற்பாடுடையவையாக மிளிரும். அதிபர்கள் முழுநிறைவோடு பணிபுரியும் சந்தர்ப்பங்கள் மிளிரும். பாடசாலை எல்லைக்குள் காலடி வைத்த சிறார்கள் அனைவருமே சமூகப் பயன்பாடுடையவர்களாக உருவாக்கப்படுவர். கல்வி பற்றிய தூய கரிசனையுடையோர் இதற்கான வழியை அகலத் திறக்க முன்வரவேண்டும். தமது சொந்த ஆசா பாசங்களுக்கும், சுய கௌரவத்தினைப் பேணவும் தடைப்பட்டுள்ள எமது சந்ததியின் கல்விப்பாதையில் தடைக்கற்களாக நாம் மாறக்கூடாது.

சமூகத் தலைவர், நடுநிலையாளர், ஆலோசகர், வழிகாட்டி, நீதிமான், கலாசார ஒழுங்கமைப்பாளர், ஆசிரியத்தலைவர், கலைத்திட்டமுகாமையாளர் என்ற பல குண நலன்களின் இருப்பிடமாக இருப்பவரே உண்மையான அதிபராவார். யாவற்றுக்கும் மேலாக ஒரு சமூக நெறியாளராக, ஓர் ஆன்மீக வழிகாட்டியாக இருப்பது நன்று. அதிபர்களது சுதந்திர முகாமைத்துவத்தினை கல்வியுலகம் வரவேற்கும் காலம் மிக அண்மையில் உள்ளது. சமூகத்திற்குப் பயன்தரும் என்றுதான் கருதுவதைத் துணிவுடன் செயலாக்கத் துணிவில்லாத அதிபர்களது தலைமை பல [illegible] சமூகத் [illegible] என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். ★

## சமய சந்நிதிகளில்

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய இலட்சார்ச்சனைப் பூர்த்தி விழா நாளை புதன்கிழமை நடைபெறுகிறது. அன்று காலை 7 மணிக்கு மூல மூர்த்திகளுக்கு அபிஷேகஆராதனை இடம்பெறும். பூஜைகளைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருவார் ஆலய பிரதம குரு சி. கிருபாகரக்குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

ஊரெழு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்தமாதம் 22ஆம் திகதி ஆரம்பமானது. தேர்த்திருவிழாஇன்றுகாலை 10 மணிக்கு நடைபெறும். நாளை தீர்த்தோற்சவம் இடம் பெறும். சிவஸ்ரீ வை. தியாகராஜக்குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார். (ஐ)

★ ★ ★

புலோலி தெற்கு அருள்மிகு ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவமானது நாளை புதன் கிழமை காலை மாசி மகம் நன்னாளில் தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடையும்.

★ ★ ★

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ சிவன் கோயிலில் இன்று மாலை 4-30 மணிக்கு பிரதோஷ விரதம் விசேட அபிஷேகம் பூசை, ஆராதனை வழிபாடுகள் என்பன நடைபெறும்.

பின் பெருமான் வீதி வலம் வந்து அடியார்களுக்குஅருள் பாலிப்பார். (இ-30)

★ ★ ★

கொக்குவில் அருள்மிகு ஸ்ரீ சாயி துர்க்காதேவி அம்பாள் கோயிலின் மாசி மக இலட்சார்ச்சனை பூர்த்தி நாளை புதன்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறும். விசேட அபிஷேகஆராதனைகளும் நவசக்தி அர்ச்சனையும் வேதபாராயணம், தேவாரபாராயணம் ஆகியனவும்இடம் பெறும். (இ-30)

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் கோயிலில் மாசி மகத்திருவிழா நாளை புதன் கிழமை காலை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை 8.00 மணிக்கு மாசி மகத்தையொட்டி அபிஷேகமும், பூஜையும் நடைபெற்று அம்பாள் வீதி உலா வருதலும் இடம்பெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் ஆயிலிய நட்சத்திர தினமான இன்று மாலை 4-30மணிக்கு கூட்டுப்பிரார்த்தனையும், விசேட பூசையும் நடைபெறவுள்ளன.

சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களும் இப் பூசையின்போது பாராயணஞ்செய்யப்படவுள்ளது.

★ ★ ★

மேலைப்புலோலி தம்பசிட்டி அருள்மிகு ஸ்ரீமகாமாரி அம்பாள்(பண்யாரி அம்மன்) ஆலய வருடாந்த உற்சவத்தில் இன்று —

காலை ரதோற்சவமும், நாளை மாசிமக நன்னாளில் தீர்த்தமும் நடைபெறும்.

★ ★ ★

சங்கானை நிகரை அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன் கிழமை மாசிமக தினத்தன்று விசேட சங்காபிஷேகம், பூசை, ஆராதனைகளுடன் நடைபெறும். (இ-30)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை 6-30 மணிக்கு நடராஜர் அபிஷேகமும், மாசி மகம் பூசை, வழிபாடுகள் ஆகியனவும் நடைபெறும். (இ-30)

## நினைவு கூருதலும் நன்றியறிவித்தலும்

### 85ஆம் நாள் 31ஆம் நாள்



| அமரர் சரவணமுத்து வேலுப்பிள்ளை (ஆயுள்வேத வைத்தியர்) | அமரர் வேலுப்பிள்ளை சிவஞானபூரணம் |
|---|---|
| தோற்றம்: 12-05-1917 | 10-12-1929 |
| மறைவு: 16-12-1997 | 08-02-1998 |

தம் பாசப் பிணைப்பால் குறுகிய கால இடைவெளிக்குள் அணைந்த எம் குடும்ப ஒளிவிளக்குகளின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அதேவேளை

எம் தொடர் சோகத்தில் பங்கெடுத்து, அனுதாபம் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், குறிப்பாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க அங்கத்தினர்கள், அதன் தென்மராட்சிக் கிளையின் உறுப்பினர்கள், கொடிகாமம் ப. நோ. கூ. சங்க தலைவர், பணியாளர்கள் ஆகியோருக்கும் உள்ளத்தால் உரைத்தோமே நன்றிகள்.

'சந்திரோதயம்'
உசன்,
மிருசுவில்.

— குடும்பத்தினர்

(சி/3078)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மெய்வல்லுநர் போட்டிகள்

சுதுமலை, மார்ச் 10

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய் பிற்பகல் 1.30 மணி முதல் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய முன்றலில் அதிபர் ச. குபேரநாதன் தலைமையில் நடைபெறும். யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் செல்வி ந.கனகரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ–139)

★ ★ ★

வண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் இன்று பிற்பகல் 1.30 மணி முதல் அதிபர் மு. செல்லையா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக நல்லூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தம் கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

சங்குவேலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இல்லமெய்வல்லுநர்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் அதிபர் சு. சண்முககுலகுமாரன் தலைமையில் நடைபெறும். உடுவில் கல்விக் கோட்ட அதிகாரி அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், செ. சோதிப்பெருமாள், செ. செல்வராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர். (ஐ–152)

## மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

யும் மற்றும் பல இராணுவத் தளபாடங்களும் தங்களால் கைப்பற்றப்பட்டதாகவும்— ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது. (உ–3–21–9)

# அரசமைக்க பாரதீய ஜனதாவை புதனன்று ஜனாதிபதி அழைப்பார்

## அமைச்சர்களைத் தெரிவு செய்வதில் உயர்பீடம் மும்முரம்

புதுடில்லி, மார்ச் 10

இந்தியாவில் அடுத்த அரசாங்கத்தை பாரதீய ஜனதாக் கட்சியே அமைக்கும் என்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது.

பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி அமைப்பதைத் தடுப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்து வந்த பழம் பெரும் கட்சியான காங்கிரஸ் கட்சி தற்போது தனது முயற்சியைக் கைவிட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க பாரதீய ஜனதாக் கட்சி அரசு நம்பிக்கை வாக்குக் கோரும் போது அதனை தோற்கடிக்கும் முயற்சியில் காங்கிரஸின் கவனம் தற்போது திரும்பி உள்ளதாக புதுடில்லி தகவல்கள் தெரிவித்தன.

545 ஆசனங்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சி இம்முறை 140 இடங்களையே வென்றுள்ளது. ஏனைய கட்சிகளுடன் இணைந்து கூட்டணி அரசாங்கம் ஒன்றை நிறுவ காங்கிரஸ் கட்சி மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி கண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில்—

258 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுள்ள பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணியை புதிய அரசை அமைக்க ஜனாதிபதி அழைப்பது உறுதியாகிவிட்டது.

12 ஆவது நாடாளுமன்றத்தை அமைப்பதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை நாளை ஜனாதிபதி வெளியிடுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

மத்தியில் அடல் பிஹாரி வாஜ்பேய் தலைமையிலான பாரதீய ஜனதாக் கூட்டணி அரசு அனேகமாக எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பதவியேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் புதிய அரசில் இடம்பெறவுள்ள அமைச்சர்கள் பட்டியலைத் தெரிவு செய்வதில் பாரதீய ஜனதாக்கட்சியின் உயர்பீடம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற சபாநாயகராக பாரதீய ஜனதாக் கட்சியின் பேச்சாளர் சுஸ்மாஸ்வராய் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

கட்சியின் மூத்த தலைவரான எல். கே. அத்வானிக்கு எந்தப் பொறுப்பை வழங்குவது என்பதில் இன்னமும் முடிவு எதுவும் எடுக்கப்படாவிட்டாலும் பெரும்பாலும் உள்துறை அமைச்சுப் பொறுப்பு அவரிடம் வழங்கப்படலாம் என்று ஒரு செய்தி தெரிவித்தது. (ஐ)

## கொழும்பில்..,

(முதலாம் பக்கத் தொடர்)

கங்கள், வர்த்தக நிறுவனங்கள் உட்பட மற்றும் பல நிலையங்கள் பாதிக்கப்பட்டன.

நேற்று மாலை பெரும்பாலான தொலைபேசிச் சேவைகள் வழமைநிலைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ–9)

## தென்னந் தோட்ட உரிமையாளர் கலந்துரையாடல்

பச்சிலைப்பள்ளிப் பகுதி தென்னந் தோட்ட உரிமையாளர் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பளையிலுள்ள சங்க அலுவலகத்தில் தலைவர் முனீஸ் துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று முன்தினம் இரவு குருநகரை அண்டிய கடற்பகுதியில் தொடர்ந்து ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

நேற்றுக் காலை வழமைபோல் தொழிலுக்குப் புறப்பட்ட மீனவர்களை கடலுக்குச் செல்லப் படையினர் அனுமதிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ–51)

## ஈழத்தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்)

ணுவ நடவடிக்கைகள் அனைத்தையும்நிறுத்துதல்—

தமிழ்ப் பகுதிகளில் இருந்து படையினரை வாபஸ் பெறுதல் —

தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குதல் —

ஆகியன உட்பட பல தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பெண்...

(முதலாம் பக்கத் தொடர்)

புத் தொடர்பாகத் தேடப்பட்டுவரும்— சம்பந்தப்பட்ட மினிபஸ் உரிமையாளரான— நல்லதம்பி புலேந்திரன் இவரின் இளைய சகோதரர் என்றும் —

இவரின்மூத்தசகோதரனும் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து சில வருடங்களுக்கு முன்னர் படையினருடனான சமரில் உயிரிழந்தவர் என்றும் —

பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தேவாலய வீதியில் தாம் வாடகைக்கு எடுத்த வீட்டுக்கு இவர் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா முற்பணம் கொடுத்திருப்பது குறித்தும் பொலீஸ் விசாரிந்து வரு வதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ–3–21–9–10)

## அதிக அதிகாரங்களை..

(முதலாம் பக்கத் தொடர்)

டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசும், விடுதலைப் புலிகளும் யுத்தமயமான நடவடிக்கைகளைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும். விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

தமிழர் பிரச்சினையில் முழுமையான முறையில் ஆர்வமும் அக்கறையும் உடையவர்கள் இவ்விடயத்தில் ஈடுபடுவார்களேயானால் விடுதலைப் புலிகளும் அதனை ஏற்றுக் கொள்வார்கள்.

வடக்குக் கிழக்குக்கு தனி நிர்வாகம் தேவை. இந்நிலையில் இரு நிர்வாக முறைகளைக் கொண்ட ஒரேதேசமாக அமையவேண்டும்.

சீனா வல்லரசு; ஹொங்கொங் ஒரு சிறிய நாடு. அங்கு இவை இரண்டும் இருவெவ்வேறு நிர்வாக முறைகளைக் கொண்ட ஒரே தேசமாக உள்ளது. எனது கருத்தின்படி தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது தனி ராஜ்ஜியம் அல்ல; தங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நிர்வாக முறையைத்தான் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார்கள் எனக் கருதக்கூடாது. ஏற்கனவே இரு தடவைகள் அவர்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

யுத்த நிறுத்தமொன்றின் மூலம் தான் எந்தவொரு பேச்சுவார்த்தையையும் மேற்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் தலைவர் ஒரு நோக்கத்திற்காக போராடுகின்றார். இதற்கு முன்பு பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தைக்கான நம்பிக்கைகள் இரு சாராரிடமும் உடைந்து போயின — என்றார்.

பெரும்பான்மை சமூகத்தின் தலைமைப் பேச்சுவார்த்தைக்கான நம்பிக்கையை விடுதலைப் புலிகளுக்கு எவ்வாறு தெரிவிப்பது என அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில் வருமாறு;

இது பிரச்சினைக்குரிய விடயம் அல்ல; ஏற்கனவே இரு தடவைகள் பேச்சுவார்த்தையில் ஆர்வம் காட்டியதுடன் மட்டுமல்லாது அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டியவர்கள் விடுதலைப் புலிகள். ஆனால் அவை பயனற்றுப் போனது உண்மை.

உடன்பாட்டிற்கு வர முடியாத போது பேச்சுவார்த்தை மூலம் காலம் கடத்துவது அர்த்தமற்றது என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் புரிந்து கொண்டார்.

பண்டா—செல்வா ஒப்பந்தம் கூடத் தோல்வியடைந்ததற்கு பெரும்பான்மை சிங்களவர்கள் தான் காரணம் என்பது எனது கருத்து.

வட்டுக்கோட்டைத் தீர்மானம்தான் பிரபாகரனின் கோரிக்கைக்கு அடிப்படைத் தளமாக அமைந்திருந்தது — என்று பதிலளித்தார் தொண்டமான். (ஐ–9–21)

## சீதாராம்...

(முதலாம் பக்கத்தொடர்)

கொண்டார்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் செயற்குழு முன்னிலையில் தமது ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பிக்கப் போவதாகவும், தனது இந்த முடிவுக்கான காரணங்களை விளக்கிக் கூறப்போவதாகவும் கேசரி கூறினார்.

எந்தவித நெருக்குதலுக்கும் அடிபணிந்து தாம் இந்த முடிவை எடுக்கவில்லை என்றும், எக்காரணம் கொண்டும் தமது ராஜினாமாவை வாபஸ் பெற்றுக்கொள்ளப்போவது இல்லை என்றும் கேசரி கூறியதாக இந்திய வானொலி தெரிவித்தது.

கேசரியின் இந்த திடீர் முடிவை காங்கிரஸின் மற்றொரு மூத்த தலைவரான சரத் பவார் வரவேற்றுள்ளார்.

''ஓர் உண்மையான காந்தியவாதி போன்று கேசரி இந்த முடிவை எடுத்துள்ளார். இது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சூழ்நிலையில் திருமதி சோனியாகாந்தி கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்பார் எனநம்புகிறேன்'' என்று அவர் கூறினார்.

தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக திருமதி சோனியாகாந்தி பிரசாரம் மேற்கொண்டபோதிலும் 545 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் அக்கட்சி 140 இடங்களையே கைப்பற்ற முடிந்தது.

சீதாராம் கேசரியின் கவர்ச்சியற்ற தலைமைத்துவமே காங்கிரஸ் கட்சியின் தொடர்ச்சியானபின்னடைவுகளுக்குக் காரணம் என்று கட்சிக்குள் ஒரு சாரார் தொடர்ந்தும் கருதி வருகின்றனர்.

எனினும் கேசரியின் இந்த திடீர் ராஜினாமா அறிவிப்பு மத்தியில் அரசு அமைக்கும் முயற்சியுடன் தொடர்புடைய அரசியல் உள்நோக்கம் கொண்ட நடவடிக்கையாகவும்இருக்கலாம் என்று சில அவதானிகள் குறிப்பிட்டனர். (ஐ-9)

## ஏறாவூரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இடையில் துருப்புக்களை ஏற்றிச் செல்லும் வாகன அணியை இலக்கு வைத்து 'ரிமோட் கொண்ட்ரோல்' முறையில் வெடிக்க வைக்கக் கூடிய — இந்தக் குண்டு டிராக்டரில் இருந்த அரிசி மூடைகளுக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்எனக் கருதப்படுகின்றது.

நேற்றுப் பிற்பகல் படையினரின் வாகன அணி வந்த போதுஅதற்கு இடங்கொடுப்பதற்காக வாகன அணிக்கு எதிரே வந்த மற்றொரு டிராக்டர் வீதி ஓரமாக ஒதுங்கி நின்றது.

குண்டு வைக்கப்பட்டிருந்த டிராக்டருக்கும் வீதியால் செல்லும் வாகன அணிக்கும் இடையில் இந்த இரண்டாவது டிராக்டர் நிறுத்தப்பட்டதால் இந்த வாகன அணி மீதான இலக்கு தடைப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வாகன அணி கராஜ்ஜைக் கடந்ததும் இரண்டாவது வீதிக்கு வர முயற்சித்த போது கராஜில் இருந்த டிராக்டரில் வெடிகுண்டு வெடித்தது. இதனால் கராஜ் உரிமையாளர் எம். ஐ. மன்சூர் உட்பட இரு முஸ்லிம்கள் அந்த இடத்திலேயே, உயிரிழந்தனர்.

இரண்டாவது டிராக்ரரின் சாரதியான பாக்கியராஜா ரவீந்திரன் உட்பட மூன்று தமிழர்களும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

குண்டு வெடிப்பின் சிதறல்கள் 50 மீற்றர் தொலைவில் இருந்த ஏறாவூர் பொலீஸ் நிலையத்தையும் தாக்கின. இதில் பொலீஸார் ஒருவர் பலியானார்; மூவர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட கராஜ் உட்பட இச் சம்பவம் காரணமாக 20 க்கும் மேற்பட்ட கட்டடங்களும், சில வாகனங்களும் சேதம் அடைந்தன.

காயமடைந்தவர்களில் 16 பேர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வர் பொலீஸார் ஆவர். (ஐ–9–21–10)



தரமான முறையில்
குறைந்த கட்டணத்தில்
► போட்டோ பிரதிகள்
► லமினேட்டிங் (கவரிடுதல்)
நாடவேண்டிய இடம்:
அருண்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org